" மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம் "

உ
சிவமயம்

விலை ரூபா : 25.00

# சிவநெறி

# SIVANERI

மலர் - 3
இதழ் - 1

முத்திங்கள் சஞ்சிகை

தை
மாசி
பங்குனி } 1993

## திருக்கோணேஸ்வர ஆலய

# மண்டலாபிஷேக சிறப்பு மலர்

நினைத்த காரியம் அனுக்கூலமே புரியும்

கோணலிங்கப் பெருமானின் மூலலிங்கம்



பரிந்துநன் மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிர் மேல்வருங் கூற்றைத்
திரிந்திடா வண்ணம் உதைத்தவர்க் கருளுஞ்
செம்மையார் நம்மை யாளுடையார்
விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கை வண் செருந்திசெண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே.

திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் வெளியீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்ம உபதேசம்

## எல்லாம் சிவமயம்

ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அவ ரவர் பொறுப்புக்கும் அந்தஸ்துக்கும் ஏற்ப வண்டி வாகனங்களை உடையவராகின்றனர் இறையவரது குடும்பத்தில் அமைந்த வாகனங் களும் அங்ஙனம் முற்றும் பொருத்தமானவை கள். தலைவனது தகைமைக்கும், பொறுப்புக் கும், அமைதிக்கும் ஏற்ப அவருக்கு ரிஷபம் வாகனம் தாய் பராசக்தியின் பராக்கிரமத் துக்கு ஏற்ப அவளுக்குச் சிங்கம், முருகனது அழகுக்கு அவனுக்கு மயில், மூத்தவனது அறிவு எதையும் துருவி ஆராயவல்லது என்பதற்கு அறிகுறி, எதையும் பொத்துத் துளைக்கிற எலி - இங்ஙனம் ஊர்திகள் ஏற்பட்டிருக்கின் றன. எல்லா உயிர்களுக்கும் அந்தர்யாமியாயி ருந்து இறைவன் அவைகளை ஆட்டுவிக்கி றான் என்பதே வாகனம் என்பதன் உட்கருத்து. உண்மையில் உயிர்களெல்லாம் அவருக்கு வாக னம், பாம்பு, பறவை, உக்கிரமான மிருகம் சாந்தமான மிருகம், சிறிய உயிர், பெரிய உயிர் எல்லாம் அவருக்கு வாகனம். ஜீவர்களைச் சிவனோடு இணைத்துக் காணுமளவு கேடு இல்லை என்ற கோட்பாட்டையும் அவரது குடும்பம் விளக்குகிறது. அக்கோட்பாட்டின் உயர்வைத் தம் தலை முடியில் அவர் வைத் துள்ளார். சந்திரனுக்கும் பாம்புக்கும் என்றும் பகை. ராகு, கேது என்ற ஸர்ப்பங்கள் சந்திர சூரியர்களை விழுங்கக் காத்துக் கொண்டிருக் கின்றன என்பது ஐதிகம். ஆனால் சிவனாரது ஜடாமுடியில் ஸர்ப்பமும் சந்திரனும் பகை மையை இழந்து பண்புற்றிருக்கின்றன. அவர் மயமாய்க் காணுங்கால் பாம்பும் பயத்துக் குரியதல்ல. வேறுபாடுகளெல்லாம் அவரது வெவ்வேறு விளையாட்டுகளாய் அமைந்து விடுகின்றன.

புலிவேஷம் போட்டுக்கொண்டு அண்ணன் தன் தங்கையைப் பயமுறுத்தப் போனான். அவள் கோவென்று கதறிக் கீழே விழுந்தாள். அவ்வேளையில் அவன் வேஷத்தை நீக்கினான். 'ஓ இது அண்ணன்தானா' என்று அவள் அரு கில் ஓடி வந்தாள். இக்கோட்பாடு எல்லா உயிர்களுக்கும் மெய். அண்ணல் அளவில் அடங்கா வடிவங்களை எடுத்து விளையாடு கிறார். அறிவிலிகள் அதை அறியாது அவரது வடிவங்களில் வேண்டுவன வேண்டாதன என வகைப்படுத்துகின்றனர். சிவஞானம் பெறு கின்றவர்களுக்குப் பாம்பும், புலியும், பசுவும், சிங்கமும் ஒன்றே. பூதங்களுள் புனலும் அன லும் அவரிடத்துப் பொலிந்திருக்கின்றன. சிவம் என்னும் சொல்லுக்குப் பொருள் மங்க ளம். உலகைச் சிவத்துக்கு அன்னியமாகக் காணுமிடத்தே அது அமங்களம். அதைச் சிவமயமாய்க் காணுமிடத்து அது மங்களகர மானது. எல்லாம் சிவமயம். இவ்வுண்மையை அறிந்து அதற்கு ஒப்ப ஒழுகுபவர்க்கு வாழ்க்கை நலன் அனைத்தையும் தரவல்லது.

— ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்


## சஞ்சிகைக் குழு

- ★ திரு. கு. கோணாமலை ஆசிரியர்
- ★ திரு. க. சவுந்தரராசா துணை ஆசிரியர்
- ★ திரு. வ. தங்கராசா
- ★ திரு. செ. சிவபாதசுந்தரம்
- ★ திரு. அ. பரசுராமன்
- ★ திரு. சு. கனகசபாபதி
- ★ திரு. நா. காளிராசா
- ★ திரு. கெ. தர்மகுலராசா
- ★ திரு. பு. புவனேஸ்வரன் வி. பொறுப்பாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

என்னை நினைந்தடிமை கொண்டென் இடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான் - புன்னை
விரசுமகிழ் சோலைவியன் நாரையூர் முக்கண்
அரசுமகிழ் அத்திமுகத் தான்

ஓம்



## திருக்கோணேசர் துதி

(சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய ஊர்த்தொகைப் பாடலில்)

திருச்சிற்றம்பலம்

நிறைக் காட்டானே நெஞ்சத்தானே நின்றியூரானே
மிறைக் காட்டானே புனல்சேர் சடையாய் அனல்சேர்கையானே
மிறைக் காட்டானே திருமாந் துறையாய் மாகோணத்தானே
இறைக் காட்டாயே எங்கட்குன்னை எம்மான்தம்மானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

# திருக்கோணேஸ்வரத் திருப்பதிகம்

பண் - புறநீர்மை

திருச்சிற்றம்பலம்

நிரைகழ லரவம் சிலம்பொலி யலம்பு
நிமலர் நீறணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவு
மளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோதம் நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே

கடிதென வந்த கரிதனை யுரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடு முடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமுன் நித்திலஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றும்
கோணமா மலையமர்ந் தாரே

பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்
படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாக
மாகமுன் கலந்தவர் மதின்மேல்
தனித்தபே ருருவ விழித்தழ னாகந்
தாங்கிய மேருவெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே

பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன் தேவி வேண்டமுன் கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்
தெழித்து முன் னரற்றும் செழுங்கடற் றரளஞ்
செம்பொனு மிப்பியுஞ் சுமந்து
கொழித்துவன் றிரைகள் கரையிடைச் சேர்க்குங்
கோணமா மலையமர்ந் தாரே

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பா னீக்கி
நுளைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே

பரிந்துநன் மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிர் மேல்வருங் கூற்றைத்
திரிந்திடா வண்ணம் உதைத்தவர்க் கருளுஞ்
செம்மையார் நம்மையா ளுடையார்
விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்திசெண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்தவன் தருக்கை யிழித்தவர் விரலா
லேத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பு
மிறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வுங்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புக ழாளர்
கோணமா மலையமர்ந் தாரே

அருவரா தொருகை வெண்டலை யேந்தி
யகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையு நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவருமறியா வண்ணமொள் ளெரியா
யுயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்குங்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே

நின்றுணுஞ் சமணுமிருந்துணுந் தேரும்
நெறியலா தனபுறங் கூற
வென்றுநஞ் சுண்ணும பரிசனர் ஒருபான்
மெல்லிய லொடுமுட னாகித்
துன்றுமொண் பௌவ மௌவலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபல மோதிக்
குன்றுமொண் கானல் வாசம்வந் துலவுங்
கோணமா மலையமர்ந் தாரே

குற்றமி லாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம் பந்தன்
உற்றசெந் தமிழார் மாலையீ ரைந்தும்
உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்
சுற்றமு மாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே

திருச்சிற்றம்பலம்

---

அகத்தியர் துதித்த

## திருக்கோணேஸ்வரம்

ஆரண முதலே அந்தமே நடுவே
அத்தனே சுத்தவான் பொருளே
நாரணன் முதலார் இன்னமும் காணா
நக்கனே நாயக மணியே
வாரணி முலையாள் மலைமகள் அகலா
வாமனே சோமசேகரனே
சீரணிக் கடல்சூழ் தென்திசைக்கோணை
சிகிரிவாழ் தேவனே சரணம்

(திருக்கரைசைப்புராணம்)

திருநாவுக்கரசர் பாடிய
திருநெய்த்தான பதிகத்தில்

## திருக்கோணேஸ்வரம்

தக்கார் அடியார்க்கு நீயே என்றும்
தலையார் கயிலாயன் நீயே என்றும்
அக்காரம் பூண்டாயும் நீயே என்றும்
ஆக்கூரில் தான்தோன்றி நீயே என்றும்
புக்காய ஏழுலகும் நீயே என்றும்
புள்ளிருக்கு வேளூராய் நீயே என்றும்
தெக்கார மாகோணத் தானே என்றும்
நின்ற நெய்த் தானா என் நெஞ்சுளாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## அருணகிரிநாதர்

# திருக்கோணமலை திருப்புகழ்

விலைக்கு மேனியிலணிக் கோவை மேகலை
தரித்த ஆடையு மணிப்பூணு மாகவே
மினுக்கு மாதர்களிடைக் காம மூழ்கியே — மயலூறி

மிகுந்த காமியனெனப் பாருளோ ரெதிர்
நகைக்க வேயுட லெடுத்தே வியாகுல
வெறுப்ப தாகியே உழைத்தே விடாய்படு — கொடியேனை

கலக்கமாகவே மலக்கூடிலே மிகு
பிணிக்கு ளாகிய தவிக்கா லேயுனை
கவிக்குளாய் சொலி கடைத்தேறவே செயும் — ஒரு வாழ்வே

கதிக்கு நாயக உனைத்தேடியே புக
ழுரைக்கு நாயெனை அருட்பார்வை யாகவே
கழற் குளாகவெ சிறப்பானதா யருள் — தரவேணும்

மலைக்கு நாயக சிவக்காமி நாயகர்
திருக்கு மாரனே முகத்தாறு தேசிக
வடிப்ப மாதொரு குறப்பாவை யாள்மகிழ் — தருவேனே

வசிட்டர் காசிபர் தவத்தான யோகியர்
அகத்திய மாமுனி இடைக்காடர் கீரனும்
வகுத்த பாவுறு பொருட்கோல மாய்வரு — முருகோனே

நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர்
திருக் கொணாமலை தலத்தாரு கோபுர
நிலைக்குள் வாயினில் கிளிப்பாடு பூதியில் — வருவோனே

நிகழ்த்து மேழ்பவ கடற்சூறை யாகவே
எடுத்த வேல்கொடு பொடித்தூள தாவெறி
நினைத்த காரிய மநுக்கூல மேபுரி — பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

கோணேசர் ஆலயக் குடமுழுக்கினைத் தொடர்ந்து இடம் பெறும் மண்டலாபிஷேகப் பூஜையை ஒட்டி 'சிவநெறி' இதழ் வெளியிடும் சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துக்களை அளிப்ப தில் மிக்க மகிழ்வடைகின்றேன்.

இலங்கைவாழ் இந்துமக்களுக்கு கோணேசர் ஆலயம் அருள் மையமாகத் திகழ்கிறது. பாடல்பெற்ற திருத்தலம் என்பதும் பழம்பெருமை மிக்கது என்பதும் கோணேசர் ஆலயத்துக்கே உரிய சிறப்புகளாகும்.

கடந்த சில ஆண்டுகளாக முறையாகப் பூஜைகள் நடை பெறாத நிலையிலிருந்த கோணேசர் ஆலயத்தைப் புனரமைக் கவும், கும்பாபிஷேகம் காணவும் திருவருள் கைகூடியது. இத் தகைய ஒரு அரிய பணியை எமது அமைச்சின் அநுசரணை யோடு ஆற்ற முடிந்தமைக்காக நான் மிக்க மகிழ்வடை கின்றேன்.

தற்போது மண்டலாபிஷேகம் நிறைவுற்ற பின்னர் ஆலயத் தின் அருட்சக்தி எங்கும் எழுந்து பரவவும், பக்த பெருமக்கள் வழிபாடியற்றவும் கைகூடியுள்ளமை நம் அனைவருக்குமே நிறைவு தருகின்ற நிகழ்வுகளாகும்.

இப்பெரும் பணியில் முன்னின்று செயல்பட்ட அனைவருக் கும் கோணேசர் அருள் கிடைக்கவேண்டுமெனப் பிரார்த்திக் கின்றேன்.

'சிவநெறி'யின் சிறப்புமலர் மணம் பரப்பவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**பி. பி. தேவராஜ்**

இந்துசமய கலாசார அலுவல்கள்
இராஜாங்க அமைச்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிஷ்டா கலாநிதி
வேதாகமக் கிரியா சூடாமணி சிவாசார்ய
சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் அவர்களின்
(ஆதீன குரு: ஸ்ரீ நாகபூஷனி அம்பாள் தேவஸ்தானம் நயினாதீவு)

# ஆசிச்செய்தி

சொல்லாண்ட சுருதிப் பொருள்சோதித்த
தூய்மனத் தொண்டகு வுள்ளீர்

—சேந்தனார் திருப்பல்லாண்டு

இடையறாது தொண்டு செய்பவர் தொண்டர் ஆவர். தொண்டு இறைவனை நோக்கி செய்வதும் இறைவனை பாடிப் பரவும் அடியார் சமுதாயத்திற்கு செய்யும் தொண்டும் இரு வகைத்தாம். மக்களையே இறைவனாக நினைத்து செய்யும் தொண்டு மேல்நிலைத்தாம். புண்ணியத்தை தருவதாம். இத் தொண்டு செய்வதற்கு மனதில் அன்பும் பண்பும் ஆகிய இரண்டும் உறுதியாக வேண்டும். தூய மனம் என்று சொன்னதினால் இடையறாது சிவசிந்தனையுடைய மனமுடையவர்களாக இருத்தல் வேண்டும் என்பது சிந்திக்கத்தக்கதாம். பெரிய புராணத்துக்கு திருத்தொண்டர் புராணம் என்ற பெயருண்டு. தொண்டர் சீர் பரவுவாம் என்று தொண்டர்கள் வரலாறுகளைக் காணலாம். தண்ணீர் பந்தல் வைத்துசெய்தசிறப்பையும் அடியார்கட்கு அன்னமளித்த வரலாறுகளையும் காணலாம். ஒவ்வொரு மனிதனையும் இறைவனாக எண்ணி செய்வது சிறந்த தொண்டாகும். இறைவனை நினைத்து செய்யும் தொண்டு சமுதாய தொண்டாகபரிணமிக்கின்றது. பெருமைதருவதும் புண்யமும் ஆகும். திருக்கோணேஸ்வரப் பெருமானின் மகாகும்பாபிஷேகத்தில், திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை ஆற்றிய சேவை மிகவும் சிறந்ததாகும். அடியார்கட்கு அன்னம் அளித்து தாக சாந்தி செய்து பலவகை உதவிகள் செய்தது (மிகவும் போற்றுதற்கும்) சமூகத் தொண்டாகும். சமயத்தின் சிறப்பு தானும் உயர்ந்து சமூகத்தையும் உயர்த்துவதாகும். எனவே மாவட்ட இந்து இளைஞர் பேரவை கோணேஸ்வரப் பெருமானின் பேரருளால் இளைஞர்கள் வாழ்க, தொண்டு வளர்க பல்லாண்டு பல்லாண்டு என வாழ்த்தி ஆசி கூறி ஸ்ரீ மாதுமை அம்பாள் உடனுறை கோணேஸ்வரப் பெருமான் திருவருள் கிடைப்பதாக பன்முறை பணிந்து ஏத்தி இறைஞ்சுவாம்.

லோகா சமஸ்தார் சுகினோ பலந்து

''மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துசமய கலாசார அலுவல்கள்
இராஜாங்க அமைச்சின் செயலாளர்
திரு. கா. தயாபரன் அவர்களின்

# ஆசிச்செய்தி

திருக்கோணேஸ்வரம் வரலாற்றுச் சிறப்புக்கள் கொண்ட பழம்பெரும் சிவத்தலம். இதன் மகிமையால் இலங்கையே பெருமை பெறுகின்றது. பூட்டிக் கிடந்த ஆலயம் திறக்கப்பட்டுள்ளது எனக் கேள்வியுற்ற அடியார் கூட்டம் நாளாந்தம் சென்று வழிபட்டு குறைகளைப் போக்கிக்கொள்ள வாய்ப்பினை உருவாக்கிய திருவருளுக்கு சைவ உலகு தலை வணங்க வேண்டும்.

கும்பாபிஷேகம் கடந்த 11.02.93 இல் நடந்தேறியவுடன் 48 நாட்கள் பூசைகள் இடம்பெற்று மண்டலாபிஷேகம் நடைபெறுவது பெரு மகிழ்ச்சி தருகின்றது. இதற்காக திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை ''சிவநெறி'' மூலம் மண்டலாபிஷேகம் மலர் ஒன்று வெளிக் கொணரவிருப்பது பாராட்டிற்குரியது. சிவநெறி சைவத்திற்கு மறுமலர்ச்சியை ஏற்படுத்திவரும் இதழ். திருமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் பணி மிகவும் மகத்தானது. இதன் சேவைகள் இலங்கைவாழ் இந்துக்களுக்கு ஓர் எடுத்துக் காட்டு. மண்டலாபிஷேகம் சிறப்புற அமையவும் இந்து இளைஞர் பேரவையின் பணிகள்மேலோங்கவும் சிவநெறி தழைத்தோங்கவும் திருக்கோணேசர் அருள்புரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

ஒப்பம்: **கா. தயாபரன்**
செயலாளர்,
இந்துசமய, கலாசார அலுவல்கள்
இராஜாங்க அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துசமய கலாசார அலுவல்கள் பணிப்பாளர்
திரு. க. சண்முகலிங்கம் அவர்களின்

# ஆசிச்செய்தி

திருக்கோணேஸ்வரம் இலங்கையின் வரலாற்றில் சிறப்பிடம் பெறும் சிவத்தலம். பழமை வாய்ந்த இத்தலத்தின் பெருமையை யாவரும் அறிவர். இத்தகைய சிவத்தலத்தின் மகா கும்பாபிஷேகம் கடந்த 11-02-1993ல் மிக சிறப்பாக நடந்தேறியது. அதைத் தொடர்ந்து 48 நாட்கள் பூசைகள் நடைபெற்று இன்று மண்டலாபிஷேகமும் நடைபெறத் திருவருள் கிடைத்துள்ளது.

கடந்த காலங்களில் பூசை வழிபாடுகள் இன்றி பூட்டப்பட்டுக் கிடந்த இவ்வாலயத்தை திறந்து பெருந் திரளான அடியார்கள் நாளாந்தம் வழிபட்டு தமது குறைகளைப் போக்கிக்கொள்ளும் வாய்ப்புக் கிட்டியிருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது.

மண்டலாபிஷேகம் நடந்தேறும் இவ்வேளையில் திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை ஒரு சிறப்பு மலரை வெளியிட முன்வந்துள்ளது. இப்பேரவையின் பணிகள் சிறப்புற அமையவும், மண்டலாபிஷேகம் இனிதாய் நிறைவேறவும் பூசை வழிபாடுகள் தொடர்ந்து நடைபெற்று அடியார்கள் குறை தீரவும் கோணேசப் பெருமானை வேண்டுகின்றேன்.

**க. சண்முகலிங்கம்**
பணிப்பாளர்
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு. கோ. செல்வராசா, ஜே. பி. யு. எம். அவர்களின்

# ஆசிச்செய்தி

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்''

மேன்மைகொள்ளும் சமயநீதி சைவ நீதியாகத்தான் இருக்க வேண்டும். சாந்தியும் சமாதானமும் தரவல்ல நீதி நெறி எதுவோ — அது சைவ நீதியாகும்.

''சிவநெறி'' அன்பு மார்க்கம் காட்டும் முத்திங்கள் இதழாகும். மேன்மைகொண்டு விளங்கும் இவ்விதழ் திருக்கோணநாதப் பெருமானின் குடமுழுக்கு கண்டு மண்டலம் முடிந்த நாளில் வெளிவரும் இவ்விதழின் இனிய நாதம், நானிலம் உய்ய வழிகாட்டும் என நம்புவோமாக.

வண்ணத் தமிழ் வளமான பக்திமொழி அருளாளர் பலர் சிவனை வியந்து பாடினர். சிவனின் நாமங்களில் திருக்கோணநாதப் பெருமானின் திருநாமம் திருஞானசம்பந்தப் பெருமானாலும் அருணகிரியின் திருப்புகழாலும் சிறப்பு பெற்று சித்தத்தை சிவன்பால் ஈர்த்தது.

சிவநெறி தமிழ் உலகெங்கும் சைவநீதி விளங்க ஏழிசையாய் இசைப் பயனாய் விளங்கும் கோணேசப் பெருமானின் திருவடிகளை வாழ்த்தி வணங்குகின்றேன்.

143, பிரதான வீதி,
திருக்கோணமலை
தொலைபேசி: 22412

மு. கோ. செல்வராசா
தலைவர் - திருக்கோணேஸ்வர
ஆலய பரிபாலன சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டலாபிஷேகம்

சிவன், அம்பாள், பரிவார மூர்த்திகள் முதலாகிய எல்லாச் சுவாமிகளுக்கும் குறிக்கப்பட்ட கால மண்டலாபிஷேகம் முடியும் வரைக்கும் ஸ்நபனம் முதல் ஸவறஸ்ரகலச ஸ்நபனம் வரையும் உள்ள ஒவ்வொரு நாளும் அபிஷேகம் சிறப்பாகச் செய்தல் வேண்டும்.

ஒரு மண்டலம் திரிபஷம் என்று பெயர். அதாவது 45 நாள். அரை மண்டலம் இரண்பசஷம் 30 நாள். கால் மண்டலம் ஒரு பசஷம் 15 நாள். மண்டலாபிஷேகப் பூர்த்தியில் 45 நாள் உத்தமம். 30 நாள் மத்திமம். 15 நாள் அதமம் என்று கூறப்படுகின்றது.

மண்டலாபிஷேக தினம் கணக்கிடும்போது கும்பாபிஷேக தினத்திற்கு அடுத்த நாளில் இருந்தே கணக்கிடல்வேண்டும். சிலர் கும்பாபிஷேக தினத்தையும் சேர்த்துக் கணக்கிடுகின்றனர்.

மண்டலாபிஷேக முடிவான தினத்தில் சகஸ்த்ரகலச அபிஷேகம் அல்லது சங்காபிஷேகம் மகேஸ்வர பூசையும் செய்வர். இரவு உற்சவம் திருக்கல்யாணம் என்பன செய்வது வழக்கமாகும். இதன் பின்பு இரட்சாபந்தன உத்துவாசன சுவாமிக்குச் செய்தல் வேண்டும்.

இந்தப் பிரகாரம் வேதாகம விதிகளில் கூறியபடி கும்பாபிஷேக கிரியைகளை முறைப்படி செய்யும்போதே கும்பாபிஷேக கிரியை முற்றுப் பெறும். இவற்றிற்கு இறைவன் திருவருள் முன்னிற்க வேண்டும்.

அஷ்டபந்தனஞ் சாத்திய தோஷ நிவாரண அகோர சமனய முதலான தன் பொருட்டும் கும்பாபிஷேகம் செய்த பலனை அடைவதன் பொருட்டும் அவசியம் செய்யவேண்டியது மண்டலாபிஷேகமாகும்.

பிரம்ம ஸ்ரீ. சு. சண்முகரெத்தின சர்மா,
(எஸ். எஸ். சர்மா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேச்சர் திருவூஞ்சற் பதிகம்

ஆக்கியோன்:
சைவப்புலவர் — பண்டிதர் இ. வடிவேல் அவர்கள்
திருக்கோணமலை

## காப்பு

வேழ முகத்தவனே வினாயகனே நின்னடியில்
ஏழையேன் வீழ்ந்து இறைஞ்சுகின்றேன் - ஆளுடைய
பிள்ளைக் கவியமுதைப் பெற்று திருக்கோணேச
வள்ளல்தனக் கூஞ்சல் வழக்கு.

## நூல்

சீர்மேவு மாமறைகள் கால்களாகச்
செய்ய திரு ஆகமங்கள் விட்டமாக
பார்மேவு பைந்தமிழ்சேர் பண்கயோடு
பகரரிய திருமுறைகள் வடமதாக
ஏர்மேவும் ஓங்காரப் பீடமதில்
ஏழிசையின் மலர் தூவி இனிது போற்றக்
கார்மேவு தென்கைலைக் கோடு தன்னில்
மாதுமைசேர் கோணேசா ஆடீரூஞ்சல்

தண்மதியின் ஒளிதவழும் கோணைக் குன்றில்
தவயோக முனிவர்களின் தேசுதங்க
விண்ணவர்கள் சூழ்ந்திருந்து வேதமோத
விஞ்சையர்கள் வேதமொடு கீதம் பாட
இன்னிசை நாரதர் வீணைதன்னிற் கூட்ட
எழிலுடனே நந்தி மத்தளமுங் கொட்ட
மண்ணிலுயர் கோணைநகர் தன்னில் மேவும்
மாதுமைசேர் கோணேசா ஆடீரூஞ்சல்

திருமகளும் கலைமகளும் வடந்தொட்டாட்ட
செய்ய புவிமகள் கவரி வீசி நிற்க
கருமேக வண்ணனொடு வருணன் வாயு
கணநாதர் இந்திரன் கைகூப்பி நிற்க
அருள்மேவும் அரமகளிர் பரதமாட
ஆதிசேடனு மருகே அமர்ந்து நோக்க
திருமேவும் தெக்காரும் மாகோணத்தில்
திகழ்கோணை நாதரே ஆடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருக்கனொளி ஆழ்கடலின் மீதெழுந்து
அருட்கோணை நாதரடி தழுவி யோங்கச்
செருக்குடைய இராவணன் தென்கைலை தன்னைச்
சினங்கொண்டு வாளோச்சி எடுக்கும் போது
வெருக்கொடுமை தனைக்கரத்தா லணைத்துக்காலின்
விரலதனால் அடர்த்தவனுக் கருள்புரிந்த
மறக்கருணைத் திருக்கோணை நாதரே நீர்
மாதுமையோ டினிதிருந்து ஆடீரூஞ்சல்.

சினகரமும் கோபுரமும் தேரூர் வீதி
செய்யதிரு மண்டபமும் மதிலும்கட்டி
கணபதிக்கும் கந்தனுக்கும் கோவில் கொண்டு
கருவாய வல்வினைகள் அறுக்கவல்ல
பவநாசம் செய்யுமுயர் பாவநாசத்
தீர்த்தமுடன் திருப்பணிகள் பலவும் செய்து
சிவநேயக் குளக்கோட்டன் கோயில் மேவும்
செய்யதிருக் கோணேசா ஆடீரூஞ்சல்

அகத்தியரும் அருணகிரிநாதர் ஞான
சம்பந்தர் துதித்த அருட்கோணை நாதா
இகத்திலுனை இதயத்தில் இருத்து வோர்க்கு
இகபர போகம் அருளும் ஈசா அன்பர்
பவத்தொடக்கை அறமாற்றும் பாவ நாசா
பரஞ்சுடரே பதமுத்தி தன்னையீத்து
சிவத்துவத்தில் சேர்த்தெம்மை ஆளுங் கோணைத்
தேவாதி தேவரே நீர் ஆடீரூஞ்சல்

ஆழிபுடை சூழ்ந்தொலிக்கும் ஈழந்தன்னில்
அரியதிருக் கோணமலை நாதர் தன்னைக்
காழிவளர் பிள்ளைமனம் கசிந்து பாடக்
கஜபாகு மன்னனகங் கரித்து வந்து
ஊழ்வினையால் இருகண்ணும் இழந்து மீண்டும்
உயர்திரு வெண்ணீறணிந்து உய்திபெற்றான்
சோழனொடு பாண்டிய பல்லவரும் போற்றும்
கோணை நகர்க் கரசேநீர் ஆடீரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவநெறி தழைத்தோங்கத் தமிழுமோங்கத்
தவமுனிவருள மோங்கத் தர்ம மோங்கத்
தெய்வ மணந் திகழ்ந்தோங்கத் திருவுமோங்கத்
தேவார இசையோங்க வேத மோங்க
உய்யுநெறி கொண்டு குளக் கோட்டு மன்னன்
உளமோங்க எடுத்ததிருக் கோயில் தன்னை
பொய்மாயப் போர்த்துக்கீ சர்செய் தீதைப்
புன்னகையால் ஏற்றிவரே ஆடீரூஞ்சல்

மன்றில் வளர் மாமணியே ஆடீரூஞ்சல்
மந்திரமும் தந்திரமும் மருந்து மாகிக்
குன்றில் வளர் குருமணியே ஆடீரூஞ்சல்
குகனையருள் குலமணியே ஆடீரூஞ்சல்
துன்றுபிடி யன்னநடை மாதுமையாம்
அம்சகமனாம்பிகை யோடாடீரூஞ்சல்
இன்றெமக்கும் இருள்கடிந்து அருள்செய்கின்ற
இறையவரே கோணேசா ஆடீரூஞ்சல்

திங்களொடு கங்கை வளர் சடையு மாடத்
திகந்தோங்கு சர்ப்போப வீதமாடி
நங்கை மாதுமையாட நயனமாட
நவமணிக் குண்டலமாடக் குழையுமாட
அங்கமெலாங் குழைந்தபய வரமாட
அடியினையிற் சிலம்பாடக் கழலுமாட
எங்கள்மனம் களித்தாட இரங்கும் கோணை
இறையவரே கோணேசா ஆடீரூஞ்சல்

**வாழி**

அஞ்செழுத்து மந்திரமும் நீறும் வாழி
அரனடியார் அந்தணர்கள் ஆவும் வாழி
பிஞ்செழுத்தாம் சிவப்பழமாம் பொருளே வாழி
பிரபஞ்ச மனைத்துமருள் பெற்று வாழி
மஞ்சுதவழ் மாமலையில் மழையும் வாழி
மன்னரொடு மக்கள்நலம் பெற்று வாழி
எஞ்சலிலாத் தமிழ்வாழி சைவம்வாழி
இறைவனடியா ரெல்லாம் வாழி வாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எச்சரிக்கை

திருவார் கோணைப் பதிமேனிய தேவா எச்சரிக்கை
தேவிமாதுமையாளொடு வருவாய் எச்சரிக்கை
மருவார் கொன்றை மதிசூடிய மகிபா எச்சரிக்கை
அரனே திருக் கோணேஸ்வர நாதா எச்சரிக்கை

மானொடொரு மழுவெந்திய கையாய் எச்சரிக்கை
மதியோடுயர் நதிதங்கிய சடையாய் எச்சரிக்கை
வானோர்முடி தவழும்திரு அடியாய் எச்சரிக்கை
கோனார் தசமுகனாக்கருள் கோவே எச்சரிக்கை

உமைமாதொடு உயர்கோணையில் உறைவாள் எச்சரிக்கை
உருவாய் அருவுருவாய் நிறைதிருவே எச்சரிக்கை
எமையாண்டருள் கோணாசல ஈசா எச்சரிக்கை
எங்கள் உயிர்க்குயிராய் வரு குருவே எச்சரிக்கை

### லாலி

லாலி லாலி லாலி லாலி லாலி
ஆலமுண்ட நீலண்ட லாலி லாலி

கோணமலை மேவியமர் கோவே லாலி
கொண்டல் வண்ண மாதுமை சேர் தேவே லாலி (லாலி)

தத்துவங் கடந்தவரே லாலி லாலி
முத்திதரும் வித்தகரே லாலி லாலி (லாலி)

சோதி வடிவானவரே லாலி லாலி
ஆதிக்கோணை நாயகரே லாலி லாலி (லாலி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பராக்கு

அரியயனும் அறியாத ஆதி பராக்கு
ஆதியந்தமில்லா அரனே பராக்கு
திரிபுர மெரித்தருளும் தேவே பராக்கு
தென்திசைக் கோணைவளர் சிவமே பராக்கு

திருமுறைகள் வேதமும் ஆனாய் பராக்கு
திகழ்சைவ ஆகமத்துறைவாய் பராக்கு
அருள்புரிந்தடியவரை ஆள்வாய் பராக்கு
அகிலாண்டநாயகத்தரனே பராக்கு

காலனைக் காலாற் கடிந்தாய் பராக்கு
கண்ணப்பனுக் கருள் கடவுள் பராக்கு
ஆலமுண்டமரக்கருள்வாய் பராக்கு
ஆடியர்துயர் தீர்தென்றுமாள்வாய் பராக்கு

## மங்களம்

மங்களம் மங்களம் மங்களம் - ஜெய ஜெய
மங்களம் மங்களம் மங்களம்

ஆதியந்தமில்லாத மாதுமையாள் பாகருக்கும்
ஐங்கரக்கடவுளுக்கும் ஆறுமுகவள்ளலுக்கும் (மங்)

சுத்தபரி பூரணர்க்கும் சோதி வடிவானவர்க்கும்
நித்திலங் கொழிக்கும் திருக்கோணமலை நாதருக்கும் (மங்)

தொண்டருக்கும் தாசருக்கும் தோத்திரம் செய் நேசருக்கும்
அண்டருக்கருளுமண்ணல் கோணமலை வள்ளலுக்கும் (மங்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேஸர் பஞ்சகீர்த்தனாஞ்சலி

கதாகாலட் சேபதிலகம், சிவகதா பூஷணம்
**முத்தமிழரசு சிவயோகச் செல்வன் த. சாம்பசிவம்**

மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிஷன்

இராகம் ; மலைய மாருதம் தாளம் : ஆதி

**பல்லவி**

மலைய மாருதம் வீசும் திருக்கோணை
மலை சேர் மாதுமை பாகனை மேவுவாய் (மலை)

**அ. பல்லவி**

கலியின் ஆட்சியால் கிலிபிடித்தலை
நிலையற்ற வாழ்வு நித்திய சுகம்பெற (மலை)

**சரணம்**

வல்லபை ஓமென எதிர்வெற்பமர்ந்துசீர்
மூல குண்டலிக்கனலை மூட்டு மூர்
நலம் பெற்றோங்கிட நான் மறை வாழநேர்
நிலைபெறத் தருமமோங்கவென் நாளும் (மலை)

இராகம் : சங்கராபரணம் தாளம் : ஆதி

**பல்லவி**

கண்டால் அருள் சுரக்கும் கல்லால விருட்சம்
கண்டு தரிசித்தருள் பெறுவம் வாரீர் (கண்)

**அ. பல்லவி**

மண்ணாசை உலகில் மமதை நரகிடை
புண்ணாகி நொந்து புகலிடம் தேடுறீர் (கண்)

**சரணம்**

பிணி துயர் வறுமை பீடைகள் போக்கும்
அணி அழகுடனே ஆரோக்ய மீயும்
நினைத்த காரியம் அனுக்கூலமேபுரி
அனல் புனல் வாத வேந்தனாரமிசைத்து (கண்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம் : காம்போதி தாளம் : சாப்பு

**பல்லவி**

சம்பந்தன் போலுன்னை வேண்டிமையல் கொண்டேன்
நிரைகழல் நாயகா திருக்கோணை நாதா (சம்ப)

**அ. பல்லவி**

எங்கே இருந்தாலும் கனவிலும் நனவிலும்
கெங்காதராவுன் கோலமெனைத் தழுவ (சம்ப)

**சரணம்**

அருந்து முணவும், பருகிடும் நீரும்
பாரும் என்னாத்ம வேரும், நீயே பரம
ஊரும் பிறவி கடைத்தேற்று மருந்தே
காருணி கருணை செய் கால காலா (சம்ப)

———

இராகம் : வசந்தா தாளம் : ஆதி

**பல்லவி**

இலந்தைக் கனிதேடும் செம்மந்தி இங்கே வா
நல்தேன் தோய்த்து கதலிக்கனி யான் தருவேன் (இல)

**அ. பல்லவி**

அலைமோதி அருள்நாதம் எழுப்பும் கோணை
மலை நாதன் திருநாமம் சொல்லி மகிழ்ந்தாட (இல)

**சரணம்**

ஆணவச் செருக்கின் கை வசப்பட்டு அழியாதே
அன்றரக்கர் பட்ட கதையைச் சொல்லன் கேள்
ஆணாட்டுப் போக்கால் அல்லலுற்றலையாமல்
சின்னல் செய்யாமல் சின்மயனைச் சேர (இல)

———

இராகம் : வறிந்தோளம் தாளம் : ஆதி

**பல்லவி**

திவ்ய சுகானந்த தரிசனம் காண
எவ்வளவு காலம் ஏங்கித் தவிக்கிறேன் (திவ்ய)

**அ. பல்லவி**

பிரிந்தினி வாழேன் பரிந்தெனை ஆட்கொள்
பரிந்து நன்மனத்தார் வழிபடு பரமா (திவ்ய)

**சரணம்**

கொப்பளித் தபிடேகம் செய்தார்க்கிரங்கினால்
செப்பமாய் அடித்தோரையு மாண்டாய்
சுப்பன் சொற் கேட்டு குந்தியெழும்பினாய்
தப்பிதம் செய்தனோ தீன பந்துவே (திவ்ய)

பெற்றவர் பிள்ளை நிலை புரியாமல் வாழ்வரோ
குற்றமிலாதார் குரைகடல் சூழ்கோணமலை
நற்றவா நாயகா நாயேனை ஆட்கொள்வாய்
எற்றிட எண்ணாய் அடைக்கலமானேன் (திவ்ய)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

கோணமாமலையின் கண் வீற்றிருந்து குவலயத்தைக் காத்தருள்பவன் திருக்கோணேசப் பெருமான். இப்பெருமான் இம்மாவட்டத்தின் சைவப் பெருமக்களின் காக்கும் தெய்வமாகவும், கருணைக் கடலாகவும் விளங்குகின்றான். இம்மாவட்டத்தின் அமைப்பே குன்றின்மேல் குடியிருக்கும் கோணை நாதனை மையமாகக் கொண்டே அமைந்துள்ளது. அதிகமாக இம் மாவட்டத்திலுள்ள சிற்றூர்கள் இவ்வாலயத்தின் பங்காளிகளாக உள்ளன. திருவிழாக் காலங்களில் ஊர்களிலிருந்து பூசைப் பொருட்களும், நைவேத்தியத்திற்குரிய பொருட்களும் வந்து குவிந்தவண்ணமிருக்கும். இவ்வகையில் இங்கு வாழ் சைவப் பெருமக்களின் வாழ்வாகவும், வளமாகவும் விளங்கும் இப்பெருமானின் இவ்வாலயம் பொலிவு மிக்கதாய் விளங்கினால்தான் இம்மக்களின் வாழ்வு பொலிவு பெறுவதும் ஆலயம் நலிவுறும்போது இம்மாவட்டமே பொலிவிழந்து காணப்படுவதும் யாவரும் அறிந்ததே.

இவ்வாலயத்தை திட்டமிட்டு அழித்தொழிக்கவேண்டுமென்று எண்ணிய யாரும் அத்திட்டத்தில் வெற்றி காணவில்லை. இவ்வாலயம் சிதைக்கப்படுவதும், புனரமைக்கப் பெறுவதும் வரலாறு. 1990ல் பொலிவிழந்த இவ்வாலயம் புதுப்பொலிவு பெற்றுள்ளது. குடமுழுக்கும் கண்டுள்ளது. தற்போது மண்டலாபிஷேகம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இவ்வேளையில் மண்டலாபிஷேக மலராக சிவநெறி முத்திங்கள் ஏடு வெளிவரவுள்ளது திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை 1981ல் இன்னுமோர் மண்டலாபிஷேக மலர் வெளியிட்டதை இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூரல் நலமாகும்.

இதுவரையில் தமிழ் மொழியில் மட்டுமே தம்பணியை ஆற்றிவந்த சிவநெறி முத்திங்கள் ஏடானது ஆங்கிலத்திலும் தம்பணியை இம் மண்டலாபிஷேக சிறப்பு மலரிலிருந்து தொடரவுள்ளது என்பதை அன்பர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் அறியத் தருவதில் மகிழ்வெய்துகின்றோம்.

திருக்கோணமலைப் பெருமானின் திருவருட் பெருமைகொண்டே இப்பேரவை நற்பணிகளைத் தொடர்ந்து கொண்டுள்ளது. மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் என்ற இலட்சிய நோக்குடன் நால்வர் பெருமக்களின் நல்ல வழிகாட்டல்களை சிரமேற் கொண்டும், மக்கள் தொண்டே மகேசன் தொண்டாக ஆற்றி வருகின்றது. திருக்கோணமலைப் பெருமான் இம்மாவட்ட அனைத்து கிராமங்களில் தாயாக விளங்குவதுபோல் இவ்வமைப்பானது இம் மாவட்ட இந்து இளைஞர் மன்றங்களின் பேரவையாக இருந்து சைவத் தொண்டும், சமூகத் தொண்டும், கல்வித் தொண்டும் ஆற்றி வருகின்றது.

எம்பெருமான் கோணை நாதனின் ஆலயம் புனரமைப்புச் செய்யப்பட்டதுபோல் மாவட்டந்தோறும் ஊருக்கோர் ஆலயம் புனரமைக்கப்படவேண்டும் எனும் பெரு நோக்கையும் இப்பேரவை கொண்டுள்ளது. இதனடிப்படையில் ஒரு சில ஆலயங்கள் முன்பே புனரமைக்கப்பட்டும் உள்ளன. தொடர்ந்தும் இப்பணி நிறைவேற அருள்வல்லான் கோணை நாதனையே வேண்டி நிற்கின்றோம்.

குடமுழுக்கு கண்டுள்ள திருக்கோணேசரின் குடமுழுக்கு நிகழ்வின்பின் துன்புறும் எம் மக்களின் துயர் துடைக்கப்படுமென்றும் இருள் சூழ்ந்திருக்கும் இம்மக்களின் எதிர்காலம் ஒளிமயமான எதிர்காலம் அடையுமென்றும் எல்லோரும் இன்புற்றிருக்கும் நிலை எமது நாட்டிற்கே ஏற்படுமென்றும் நம்புகின்றோம். இதன்பொருட்டு கோணமாமலைப் பெருமானின் திருப்பாதங்களைப் பணிந்து நிற்கின்றோம்.

— ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேஸ்வரப் பெருமானின் கும்பாபிஷேகப் பெருவிழா



எண்ணெய்க் காப்பு சாத்துவதற்காக சிவனடியார்கள் மாதுமை அம்பாள் கோபுர வாயிலின் முன் வரிசையாக நிற்கிறார்கள் (10.2.93).



யாக சாலையில் பிரதம குரு பிரம்ம ஸ்ரீ பரமேஸ்வரக் குருக்களுடன் ஏனைய சிவாச்சாரியர்களும் சேர்ந்து பஞ்ச ஆராத்தி ஆராதனையை நடத்துகின்றனர் (10.2.93).



திருக்கோணேஸ்வர நாதனின் தூபி அபிடேகம் நிறைவெய்தி சிவாச்சாரியார் பஞ்சாராத்தி காட்டும் காட்சி.



யாக சாலையில் வைக்கப்பட்ட பிரதான கும்பங்களை சிவாச்சாரியர்கள் அபிடேகத்தின் பொருட்டு எடுத்து உள்வீதி வலம் வரும் காட்சியினை காண்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருக்கோணேஸ்வர கும்பாபிஷேக தினத்தன்று ஆலய தெற்கு வீதியில் சிவனடியார் கூட்ட மத்தியில் அன்பு இல்லப் பிள்ளைகள் பஜனை நடாத்துகின்றார்கள்.



திருக்கோணேஸ்வரத்தில் எழுந்தருளியிருக்கும் நடராஜப் பெருமானுக்கும் சமயக் குரவர் நால்வரின் எழுந்தருளி விக்கிரகங்களிற்கும் அபிஷேகம் நடைபெற ஆயத்தமாக இருக்கும் காட்சி.



கும்பாபிஷேக தினத்தன்று ஆலயத்திற்கு வருகை தந்த மக்களில் ஒரு பகுதியினரைப் படத்தில் காணலாம்.

11-2-93

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



மகா பூரணாகுதிக்குரிய விசேட திரவியப் பொருட்களுடன் இந்து கலாசார இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு திரு. பி. பி. தேவராஜ் கோணேசர் ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. மு. கோ. செல்வராஜா. இந்து கலாசார அமைச்சின் செயலாளர் திரு. க. தயாபரன் ஆகியோர் வீதிவலம் வருவதையும் அவர்களிற்கு அருகாமையில் இராணுவப் பொறுப்பதிகாரி திரு. சாளியாகுலத்துங்கவும், சிவனடியார்களும் வீதிவலம் வருவதையும் காண்கின்றோம். (11-2-93)



இந்து கலாசார இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு பி. பி. தேவராஜ் உரையாற்று வதையும் அருகில் பிரதம சிவாச்சாரியார் பிரம்ம ஸ்ரீ சு. பரமேஸ்வரக் தருக்கள் ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. மு. கோ. செல்வராஜா ஆகியோர் நிற்பதையும் காணலாம். (11-2-93)



பிரதம சிவாச்சாரியார் பிரம்ம ஸ்ரீ சு. பரமேஸ்வரக் குருக்கள் வடகிழக்கு மாகாணசபை ஆளுநர் நளின் செனிவிரெத்தின அவர்களிற்கு காளாஞ்சி வழங்குவதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







1 மாதுமை அம்பாளின் கோபுர வாசல்.

2 திருக்கோணேசர் ஆலய இராஜ கோபுரத்தின் தோற்றம்.

3 கும்பாபிஷேகத்தை தொடர்ந்து மாதுமை அம்பாளின் அருட் தோற்றம்.

4 கருவரையில் மூலலிங்கத்தின் தோற்றம்.

5 பேரவையின் தொண்டரணியினால் கும்பாபிஷேகத் தினத்தன்று நடத்தப்பட்ட தொண்டர் முகாமில் அடியார்கள் தாகசாந்தி பெறுவதை படத் தில் காணலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமரிக்கண்டத் தொன்மையுடையது

# கோணேசர் ஆலயம்

எழுதியவர்: க. தங்கேஸ்வரி, பி. ஏ. (சிறப்பு), மட்/மாவட்ட கலாசார உத்தியோகத்தர்

உலக வரலாற்றில் மிகத் தொன்மையானதாகக் கருதப்படும் குமரிக் கண்டம் (லெமூரியாக்கண்டம்) பற்றி மேல்நாட்டு ஆய்வாளர்கள் ஆதாரபூர்வமான பல தகவல்களைத் தந்துள்ளனர். அவற்றை அடியொற்றி பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை, மற்றும் சட்டர்ஜி, சேஷஐயங்கள் பானர்ஜி போன்ற இந்திய ஆய்வாளர்களும் நூல்களை எழுதியுள்ளனர்.

இவை எல்லாம் குமரிக் கண்டக் காலத்து மக்களின் பண்பாடு, நாகரிகம், கலைவளம் கட்டிட அமைப்பு முதலிய சிறப்பம்சங்கள் தோற்றுவித்த உந்துதல்கள் ஆகும்.

இக்குமரிக் கண்டம் உலகில் ஏற்பட்ட மூன்று கடல் கோள்களில் மூன்றாவது கடல்கோளின்போது சிதைந்தது.

1. இச்சிதைவின்போது குமரிக்கண்டம் மறைந்து அவுஸ்திரேலியா, இந்தியா, ஆபிரிக்கா போன்ற கண்டங்கள் தோன்றின. இச்சிதைவின்போது மீந்திருந்த நிலத்திணிவுகளில் இலங்கையும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

2. இக்குமரிக்கண்டம் கடற்கோளினால் சின்னாபின்னமாக்கப்பட்டபோது சிதறிய மக்கள் வடக்கே இடம்பெயர்ந்து சென்று சிந்துவெளி, மொகஞ்சதாரே, சுமேரியா முதலிய நாகரிகங்களைத் தோற்றுவித்தனர்.

3. திருக்கோணமலையும், மொகஞ்சதாரோவும் சமகால நாகரிகம் உடையவை என்ற கருத்து ஆதாரபூர்வமாக வெளிப்பட்டுள்ளது.

## வரலாற்றுத் தகவல்கள்:

மூன்றாவது கடற்கோளின்போது பெரியதொரு ஆலயம் கடலில் மூழ்கியது எனக் குறிப்பிட்டுள்ளது. இந்த ஆலயம் கோணேசர் ஆலயமே என்பதை அகச்சான்றுகள் புறச் சான்றுகள் நிரூபிக்கின்றன. குமரிக் கண்ட அழிவின்போது எஞ்சிய நிலத்திணிவாக இருந்த இலங்கைத் தீவில், தென்கைலாயம் என அழைக்கப்படும் திருக்கோணமலையில் அமைந்திருந்த ஆலயம் சந்தித்த முதலாவது அழிவு இது எனலாம். அதன் பின்பும் பலமுறை இவ்வாலயம் அழிவுகளைச் சந்தித்துள்ளது. ஆனால் மீண்டும் மீண்டும் தோற்றமளித்துள்ளது விபரங்களைப் பார்ப்போம்.

கோணேசர் ஆலய வரலாறு தொடர்பாகப் பல நூல்கள் உள்ளன. கோணேசர் கல்வெட்டு, தெட்சண கைலாயபுராணம், மட்டக்களப்பு, மான்மியம் யாழ்ப்பாண வைபவமாலை, வையாபாடல், திருக்கோணாசலபுராணம், திருக்கோணாசல வைபவம், திருக்கரசைப் புராணம் என்பன இவையாகும். இந்நூல்களில் இவ் ஆலயம் பற்றிய வரலாற்றுச் செய்திகளுடன் கற்பனை கலந்த கர்ணபரம்பரைக் கதைகளையும் சேர்த்து எழுதப்பட்டுள்ளன.

எனவே, கோணேசர் ஆலய வரலாறு தொடர்பான கர்ண பரம்பரைக் கதைகள், இதிகாசச் செய்திகள், வரலாற்றுத் தகவல்கள், தொல்லியல் ஆய்வு ஆதாரங்கள், கல்வெட்டுக்கள், சாசனங்கள் பற்றிச் சுருக்கமாக ஆராய்ந்து அவற்றினூடே இவ்வாலயத் தொன்மையைத் தரிசிப்போம். இவ்வகையில் மகாவம்சம், சூளவம்சம், ராஜவலிய போன்ற 'பாலி' நூல்களும் நமக்குப் பெரிதும் உதவுகின்றன.

## கர்ண பரம்பரைக் கதைகளும், வரலாற்றுக் குறிப்புகளும்:

இதிகாச புருஷனான இராவணன், தென்னிலங்கை எனப்படும் திருக்கோயிலில் ஆட்சிசெய்து கொண்டு தெட்சணகைலாயமாகிய கோணேசர் ஆலயத்தைத் தரிசினை செய்து வந்தான் என்பது ஒரு கர்ண பரம்பரைக் கதை. இக்கதை 'மட்டக்களப்பு மான்மியம்' என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது.

இராவணன் தன் தாயாருக்கு சிவலிங்கம் பெற விருப்பி கோணமாமலையைப் பெயர்த்து, மலையின் இடிபாடுகளின் கீழ் சிக்குண்டு ராமகானம் பாடி வாளும், தேரும் பெற்று மீண்டான் என்பது மற்றோர் கதை. இக்கதை 'தெட்சணகைலாய புராணம்' என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது.

இராவணனுடைய காலம், கி. மு. 6000 ஆண்டு எனவும், கி. மு. 3544ல் கடற்கோள் ஏற்பட்டது எனவும் அதில் இலங்கையில் பெரும்பகுதி அழிவுற்றது எனவும் "ராஜாவலிய" என்னும் பாலிநூல் கூறுகின்றது. இக் கடற்கோளில் கோணேசர் ஆலயமும் அழிவுற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயன் வருவதற்கு முன்னரே இலங்கையில் ஐந்து ஈஸ்வரங்கள் சிறப்புற்று இருந்தன. அவையாவன திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம், முனீஸ்வரம், தண்டேஸ்வரம், திருக்கோணேஸ்வரம் என்பன. இதுவும் திருக்கோணேஸ்வரத்துத் தொன்மைக்கு ஒரு சான்றாகும்.

இத்திருக்கோணேஸ்வரம் காலத்துக்குக் காலம் கடற்கோள்களாலும் பகைவர்களாலும் அழிவுகளைச் சந்தித்து வந்துள்ளது. கடற்கோள் அழிவு பற்றி முன்னர் குறிப்பிட்டோம். மற்றொரு அழிவு மகாசேனன் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டது. மகாசேனன் அழித்ததாகக் கூறப்படும் மூன்று பிராமணக் கோயில்களில் ஒன்று திருக்கோணேஸ்வரம் என மகாவம்சம் கூறுகின்றது.

ஆனால் எத்தகைய அழிவு ஏற்பட்டாலும் ஏதோ ஒரு வகையில் மீண்டும் இக்கோயில் புத்துயிர் பெற்றுவிடுவதை வரலாற்று ஏடுகளில் நாம் பார்க்கின்றோம். மறைவதும் தோன்றுவதும் கோணேசப் பெருமானின் திருவிளையாடல் என்று எண்ணும் அளவுக்கு இம் மறைவும் தோற்றமும் அமைந்துள்ளன.

## சான்றாதாரங்கள்

மேற்குறித்த தகவல்கள் எல்லாம் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத் தகவல்கள். இவைதவிர கிறிஸ்துவுக்கு பிற்பட்ட காலத் தகவல்கள் சிலவும் கோணேசர் ஆலயச் சிறப்புகளுக்கு ஆதாரங்களாக உள்ளன.

கந்தளாய்க் கல்வெட்டு, குச்சவெளிக் கல்வெட்டு, திரியாய்க் கல்வெட்டு, பாலமோட்டைச் சாசனம் பிரடரிக்கோட்டைச் சாசனம் முதலியன இவ் ஆலயத்துடன் சோழர் கொண்டிருந்த தொடர்பினை விளக்குகின்றன.

குடுமியாமலைக் கல்வெட்டு, தென்னிந்திய கோயிற் சாசனங்கள் முதலியன இவ்வாலயத்துடன் பாண்டியர் கொண்டிருந்த தொடர்புகளைக் காட்டுகின்றன.

இங்கு அரைகுறையாகக் காணப்படும் சிற்பத் தூண்கள், இடிபாடுகள் என்பன இவ்வாலயம் பல்லவர் காலக் கோயில் அமைப்பைக் கொண்டிருந்தமையைக் காட்டுகின்றன. பல்லவர் காலக் குகை கோயில்களை நினைவூட்டும் வகையில் இன்றும் இவ்வாலயத்தின் மூலஸ்தானம் ஒன்று மலைப்பாறைக்கு அடியில் இருப்பதை அறிகிறோம்.

இங்குள்ள விக்கிரகங்கள், தெய்வச் சிலைகள், திருவிளக்குகள் முதலியன பாண்டியன் கால, பல்லவர் கால, சோழர்கால பழைமையை உணர்த்துகின்றன. ஆனால் 1961ல் மைக்வில்சன், றொட்னி ஜோண்கினாஸ் ஆகிய இருவரும் நடாத்திய ஆழ்கடல் ஆய்வின்போது இவ்வாலயத்தின் புராதன கட்டிட இடிபாடுகள், தூண்கள், தளங்கள் என்பலற்றைக் கண்டறிந்து கூறினார்கள். இவை நிச்சயமாக சோழர்கால பல்லவர் காலத்துக்கு முற்பட்ட ஆலய இடிபாடுகள் என்பதில் சந்தேகமில்லை. இவை எவ்வாறு ஆழ்கடலின் அடியில் சென்றன? இதுவே நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டிய முக்கிய விஷயம் ஆகும்.

## குமரிக்கண்டமும், ஈழமும்:

குமரிக்கண்டம் என்பது தெற்கே தென்துருவம் வரையும், தென்கிழக்கே அவுஸ்திரேலியாவரையும், கிழக்கே கிழக்கிந்தியத் தீவுகள் வரையும், மேற்கே ஆபிரிக்கா வரையும் பரந்திருந்த ஒரு நிலப்பரப்பாகும். குமரிக்கண்டம் சிதைவுற்றபோது இக்கண்டத்தின் நிலப்பகுதி பிளவுண்டு ஆபிரிக்கா, இந்தியா, அவுஸ்திரேலியா முதலிய கண்டங்களும் பல்வேறு தீவுகளும் தோன்றின.

காலத்துக்குக் காலம் இத்தகைய கடற்கோள்கள் இடம்பெற்றன. இவை ஏற்பட்ட காலத்தை பல்வேறு ஆய்வாளர்கள் வெவ்வேறு விதமாகக் கூறியுள்ளனர். ஒரு சாராரின் கூற்றுப்படி முதலாவது கடற்கோள் சுமார் 12,000 ஆண்டுகளுக்குமுன்னும், இரண்டாவது கடற்கோள் சுமார் 7000 ஆண்டுகளுக்கு முன்பும், மூன்றாவது கடற்கோள் சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்பும் ஏற்பட்டது. மற்றொரு சாரார் ஐந்து கடற்கோள்கள் ஏற்பட்டது எனக் கூறுவர்.

ஆனால் டெனன்ற் என்ற ஆய்வாளர் மூன்று கடற்கோள்கள் ஏற்பட்டன என்றும் அவற்றின் காலம் பின்வருமாறு எனவும் கூறுகிறார்.

(1) முதலாவது கடற்கோள் கி. மு. 2378

(2) இரண்டாவது கடற்கோள் கி. மு. 504

(3) மூன்றாவது கடற்கோள் கி. மு. 306

இவற்றுள் முதலாவது கடற்கோளின்போது இந்தியாவிலிருந்து இலங்கை பிரிந்ததென்றும் இரண்டாவது கடற்கோளின்போது இலங்கைக்கு பேரழிவு எதுவும் ஏற்படவில்லை என்றும் மூன்றாவது கடற்கோளின்போது இலங்கையில் பாரிய பேரழிவு ஏற்பட்டதென்றும் அவர் கூறுகிறார்.

இதனை ராஜாவலிய, மகாவம்சம், தீபவம்சம் முதலிய பாலி நூல்களும் ஊர்ஜிதம் செய்கின்றன. இம்மூன்றாவது கடற்கோளின்போதுதான் திருக்கோணமலையின் திருக்கோணேசர் ஆலயமும் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதே.

## கடற்கோளும் திருக்கோணேஸ்வரமும்:

இவ்வாறு ஏற்பட்ட கடற்கோளின்போது இலங்கையில் திருக்கோணமலை மீது அமைக்கப்பட்டிருந்த கோணேசர் கோயில் சிதைவுற்று ஆழ்கடலில் மூழ்கியது. கோணேசர் மலையடிவாரத்தில் உள்ள கடலில் காணப்படும் கோயில் தளம் தூண்கள், இடிபாடுகள் முதலியன இதை நிரூபிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இராவணன் வெட்டு என்று நாம் அழைக்கும் மலைப்பிளவும் தற்போது மலைப்பூசை நடைபெறும் மலைப்பாறையின் அடியில் உள்ள பிளவும் ஒரு கடற்கோளின்போது மலைகள் பிளவுபடும் வகையில் அமைந்திருப்பதும் இதற்கு ஒரு சான்றாகும்.

கோணேசர் மலையின் அடியில் உள்ள கடற் பிரதேசமே முன்பு புராதன கோயில் இருந்த இடம் என்பது ஆழ்கடல் ஆய்வாளரின் கருத்து.

இதற்குச் சான்றாக ஆழ்கடலில் அமிழ்ந்துள்ள கோயிற்தளம், இடிபாடுகள் முதலியனவும் அவற்றுக்கு எதிரே மீந்திருக்கும் மலையின் உட்புறம் கோயில் மூலஸ்தானமும் அமைந்துள்ளன.

இதுகாலவரை கி.பி. 1624ல் போர்த்துக்கேய தளபதி கொன்ஸ்ரான்ரைன் டீசா, கோணேசர் கோயிலை இடித்து அதன் கற்களைக் கொண்டு கோட்டைகட்டிய சம்பவத்துடன் மட்டுமே, நமது சிந்தனை நங்கூரமிட்டுத் தகைந்துள்ளது. ஆகையால் அதற்குமேல் சிந்தனை செல்லவில்லை.

ஆனால் இந்த அழிவுக்கும், கடலின் கீழ் காணப்படும் தளம் முதலிய இடிபாடுகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பது தெளிவு. அதுமட்டுமல்ல கோட்டையை கட்டுவதற்குக்கோயிலின் இடிபாடுகள் பயன்பட்டன என்பதால் அவை கடலுக்குள் வீசப்பட வேண்டிய அவசியம் இல்லை அல்லவா? மேலும் மொஹஞ்சதாரோவும், திருக்கோணமலையும் சமகால நாகரிகம் உடையவை என்றும், மூன்றாவது கடற்கோளின்போது குமரிக் கண்டத்திலிருந்து இடம் பெயர்ந்த மக்களே வடக்கே சென்று மொஹெஞ்சதாரோ, சிந்துவெளி நாகரிகத்தைத் தோற்றுவித்தனர் என்றும் ஏற்கனவே பார்த்தோம். திருக்கோணமலையில் உள்ள திருக்கோணேஸ்வரம் குமரிக் கண்டத் தொன்மையுடையது என்பதற்கு இதுவே ஒரு வலுவான சான்றாகும்.

**இதுவரை நாம் கூறியவற்றைப் பின்வருமாறு தொகுக்கலாம்:**

அ. திருக்கோணேஸ்வர ஆலயம் காலத்துக்குக் காலம் கடல்கோல்களினாலும், பகைவர்களாலும் அழிவுகளைச் சந்தித்துள்ளது.

ஆ. எவ்வாறு அழிவு ஏற்பட்டாலும், மீண்டும் மீண்டும் புத்துயிர் பெறும் அற்புதம் இவ்வாலயத்தில் நிகழ்ந்துள்ளது.

இ. கி. பி. 1624ல் போர்த்துக்கேயத் தளபதி கொன்ஸ்ரான்ரைன் டீசாவால் இவ்வாலயம் அழிக்கப்படுவதற்கு முன் கடற்கோளினால் அழிவு ஏற்பட்டுள்ளது. இது சுமார் 2300 ஆண்டுகளுக்கு முன் (கி. மு. 306) நிகழ்ந்துள்ளது.

ஈ. இறுதிக் கடல்கோள் ஏற்பட்ட காலம் குமரிக் கண்டக் காலம். குமரிக் கண்டம் சிதைவுற்றபோது எஞ்சியிருந்த நிலத் திணிவுகளில் ஒன்று இலங்கை.

உ. இலங்கையில் தென்கைலாயம் எனக் குறிப்பிடப்படும் திருக்கோணேஸ்வர ஆலயமும் கடற்கோளின்போது அழிவுற்றது. அதன் இடிபாடுகள் இன்றும் ஆழ்கடலில் உள்ளன.

## அடிக்குறிப்புகள்:


1. The Historical Element of Indian Tradition by...
2. The Lost Lemuria by Scott Elist
3. திருக்கோணமலைத் திருவுருவங்கள் — குல. சபாநாதன் 1954.
4. மட்டக்களப்பு மான்மியம் - பதிப்பாசிரியர் எவ். எக்ஸ். சி. நடராசா ப: 5
   Monograph of Batticaloa by S. O. Canagaratnam Page 7
5. 1. தெட்சண கைலாய புராணம் - தெட்சணா மூர்த்திச் சுருக்கம்
   2. திருக்கோணாசல வைபவம்-பதிப்பாசிரியர் அ. அழகக்கோன் 1950, பக். 33.
6. கோணேஸ்வர ஆலய வரலாறு, ''வீரகேசரி'' கட்டுரை 1963 மார்ச் 17, 24, 31. —41
7. P. E. Pieris, Nagadipa & Buddhist Remains in Jaffna, J R A S C B XXVI No. 70, 1917, pp 17 - 18
8. G. P. Malalasekara Editor ''Vamsakathappakasini'' Commentary on the Mahavama II London 1935 pp 685
9. The Lost Lemuria by Scott Eliot
10. 1. காலவரைாய்ச்சி டாக்டர் மா. ராசமாணிக்கனார் பக்கம் 45.
    2 History of Ceylon by Tennent Page 5-10


பிறருடைய குணதோஷங்களைப்பற்றி பேசுவதில் காலத்தைச் செலவிடுபவன் தன் காலத்தை வீணிலே கழிப்பவனாகிறான். ஏனெனில் அப்படிச் செலவிடப்பட்ட காலம் தன்னையாவது ஈசுவரனையாவது பற்றிச் சிந்திக்கப்படாமல் பிறரைப்பற்றி யாதொரு பிரயோசனமுமில்லாமல் சிந்திக்கப்பட்ட காலமாகிறது.

— ஸ்ரீ ராமகிருஷ்ண உபதேசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோடும் கழலும்

ஞானசிரோன்மணி
சைவப்புலவர் — பண்டிதர் இ. வடிவேல்

உத்தர கயிலாயத்தில் எழுந்தருளியிருந்து உலகை உய்விக்கத் திருவுளங் கொண்டு உமையம்மையோடு வீற்றிருக்கும் கணிலாசபதியுடைய அர்த்த நாரீஸ்வரத் திருவடிவத்தைத் திருஞானசம்பந்தர் சீகாளிப் பதியிலே தோணியப்பர் கோவிலிலே அகங் குழைந்து கண்ணாரக் கண்டார். ''தோடுடைய செவியன் விடையேறி'' என்ற முதற் தேவாரத்தினால் இறைவனுடைய திருக்கோலக் காட்சியை பக்தர்களுடைய உள்ளத்தில் படியும்படியாக உருவெழுதிக் காட்டினார்.

தெட்சண கயிலாயமாகிய கோணேஸ்வரத்திலே எழுந்தருளியிருந்து மாதுமையோடு வீற்றிருக்கும் கோணேசப் பெருமானுடைய அர்த்தநாரீஸ்வரத் திருவுருவை திருஞானசம்பந்தர் திருக்கோணேஸ்வரத்திலே அகக் கண்ணால் கண்டார். ''நிரைகழல் அரவம் சிலம்பொலி அலம்பும் நிமலர்'' என்று திருக் கோணமலைத் திருப்பதிகத்தின் முதற் தேவாரத்திலே இறைவனுடைய திருக்கோலக் காட்சியைப் பக்தர்களுடைய நெஞ்சிற் பதியும்படியாக உள்ளக் கிழியில் உருவெழுதிக் காட்டினார்

சம்பந்தப் பிள்ளையுடைய நெஞ்சில் முகிழ்த்து நாவில் மலர்ந்த இந்த இரண்டு தேவாரங்களும் சிந்தைக்கினிய தெவிட்டாத தத்துவத் தேன் பொதிந்த திருப்பாடல்கள். ''தோடுடைய செவியன்'' என்ற தேவாரத்தில் இறைவனை முகசாதி பாதமாகக் கண்டு பாடுகிறார். ''நிரைகழல் அரவம் சிலம்பொலி அலம்பும் நிமலர்'' என்ற திருக்கோணமலைப் பதிகத்தில் இறைவனைப் பாதாதி கேசமாகக் கண்டு பாடுகிறார். இந்த இரண்டு தேவாரங்களிலும் இறைவனுடைய அர்த்த நாரீஸ்வரத் தத்துவம் விளக்கமாகின்றது.

தோடு பெண்கள் அணியும் காதணி: அபிராமியம்மை காதில் அணிந்திருந்த தோடு அபிராமிப் பட்டருக்காக அமாவாசித் திதியை பௌர்ணமித் திதியாக்கியதோடு. இருளை அகற்றி ஒளியைப் பரப்பியதோடு. அஞ்ஞான இருளை அகற்றி மெய் ஞானத்தைப் பிரகாசிக்கச் செய்ததோடு. அத்தனை சிறப்பு மிக்க தோட்டைக் கூறியவற்றால் அதனை அணியும் செவி சுட்டுப் பொருளாய் அறியப்படுகிறது. ''ஒருமொழி ஒழிதன் இனங்கொளற் குரித்தே'' என்பது இதற்கு இலக்கணம். செவி தலையின் ஓர் அங்கமாயிருப்பது. எனவே சிரம் முதல் திருவடியீறாக அமைந்துள்ள இறைவனுடைய திருமேனியைக் கண்ட சம்பந்தப்பிள்ளை தனது தந்தையாராகிய சிவபாதவிருதயருக்கும் காட்டுவதன் மூலம் உலகெலாமுணர்ந்து ஓதற்கரியவனை உலகில் வாழ்கின்ற ஜீவாத்மாக்கள் அனைவருக்கும் காட்டுகிறார்.

பிரணவமாகிய ஓங்கார உயிர், தமிழ் என்னும் சொல்லின் முதலெழுத்தாகிய ''த்'' என்னும் தகர வொற்றுடன் கூடி த் ஓ தோ என்னும் உயிர்மெய் எழுத்தினை முதலெழுத்தாகத் தொடங்கும் ''தோடுடைய'' என்ற திருப்பாட்டு சம்பந்தப்பிள்ளையுடைய திருவாக்காகப் பிறக்கின்றது. பிரணவநாதம் செவி வழிச் சென்று சித்தத்தில் நிறைந்து தித்திக்கச் செய்வது. சித்தசுத்தி செய்வதற்குக் குருவருளால் பெறப்படும் ஞானோபதேசம் செவி வாயாகப் பெறப்படுவதால் ஐம்பொறிகளில் செவி மிகவும் முக்கியமானதாகின்றது.

ஞானக் குழந்தையாகிய சம்பந்தர் அருளிச் செய்த ''தோடுடைய செவியன்'' என்னும் முதற் பாடலாகிய தமிழ்மறை அர்த்த நாரீஸ்வர வடிவாயமைந்திருந்த அம்மையின் செவிவழிச் சென்று அப்பனின் சித்தத்தில் நிறைவதை நினைவுபடுத்துகிறது. ''செவியன்'' என்னும் சொல் செவியினை உடையவன் என இறைவனைச் சுட்டுவதால் பெண்ணோர் பாகத்தனாகிய இறைவனை ''தோடுடைய செவியன்'' என்று பாடினார் சம்பந்தர். அத்திருப்பாட்டில் விடையேறி, மதிசூடி, பொடிபூசி உமையம்மையுடன் உத்தர கயிலையில் வீற்றிருக்கும் அர்த்த நாரீஸ்வரத் தத்துவத் திருமேனியுடன் பிரமபுரத்தில் தோணியப்பர் கோவிலில் எழுந்தருளியிருக்கும் அற்புதக் கோலத்தை அகங் குழைந்து பாடுகிறார் சம்பந்தர்.

திரு இராமேஸ்வரத்தைத் தரிசித்துப் பதிகம் பாடிய ஞானசம்பந்தர் ஆழியுடை சூழ்ந்தொலிக்கும் ஈழந்தன்னில் மன்று திருக்கோணமலை மகிழ்ந்த செங்கன் மழவிடையராகிய கோணேசப் பெருமானை நினைந்து நினைந்து திருப்பதிகம் பாடினார். ''நிரைகழல் அரவம் சிலம்பொலி அலம்பும் நிமலர்'' என வருவது திருப்பதிகத்தின் முதற் பாடல் கழல் ஆண்கள் அணியும் காலணி அட்ட வீரட்டங்களிலும் அற்புதங்கள் நிகழ்த்திய ஐயனின் திருவடியை அழகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் வீரக்கழல் அது. பார்வதி பரமேஸ்வரனாக உத்தர கயிலையில் வீற்றிருக்கும் அர்த்த நாரீஸ்வர தத்துவத் திருக்கோலத்தை தெட்சண கயிலாயமாகிய திருக்கோணமலையில் அகக்கண்ணால் காண்கின்றார் சம்பந்தர். பாதாதி கேசமாகப் பதிகத்தைப் பாடினார். கழல் அசையும்போது எழும் ஓசை அரவம் எனப்படுகிறது. சிலம்பு அசையும்போது எழும் ஓசை ஒலி எனப்படுகின்றது. "ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே" என்று பாடினார் நாவுக்கரசர். ஓசை, ஒலி என்பன பிரணவநாதம். நாத சொரூபியாயிருக்கின்ற இறைவன் பிரணவ சொரூபி.

கோணேசப் பெருமானுடைய வலது திருவடியில் கழல் அரவம் செய்கிறது. இடது திருவடியில் சிலம்பு ஒலிக்கின்றது. கழலும் சிலம்பும் கோணேசப் பெருமானுடைய அர்த்த நாரீஸ்வர தத்துவ வடிவை நினைவுபடுத்துகின்றது. உத்தர கயிலையில் இருக்கும் பார்வதி பரமேஸ்வரன் மாதுமையாள் சமேதராக தெட்சண கயிலாயமாகிய திருக்கோணேஸ்வரத்தில் எழுந்தருளி அமர்ந்திருக்கிறார்.

இயல்பாகவே பாசங்களில் நீங்கிய இறைவனாகிய கோணேசப்பெருமானை நிமலர் என்றும். நீறணிந்த திருமேனியுடையவர், மாதுமையை வாமபாகத்தே கொண்டவர், இடபக்கொடியை உடையவர், என்றும் உத்தர கயிலையில் இறைவன் வீற்றிருக்கும் காட்சியைத் தெட்சண கயிலாயமாகிய கோணேஸ்வரத்திலே காண்கிறார்; காட்டுகின்றார் ஞானசம்பந்தர்.

அர்த்த நாரீஸ்வர தத்துவத் திருமேனியோடு கோணேஸ்வரத்தில் அமர்ந்திருக்கும் கோணேசப் பெருமானுடைய திருவடிகளை அழகு செய்யும் கழலின் அரவமும் சிலம்பின் ஒலியும் இரண்டறக் கலந்து ஒலிக்கும் பிரணவ நாதமும், நித்திலம் கொழிக்கும் குரைகடல் ஓதத்தின் ஒலியும் சேர்தொலிக்கும் பிரணவ ஸ்தலமாக விளங்குகின்றது திருக்கோணேஸ்வரம்.

"அம்மையே அப்பா" என்று இறைவியை முன்னிலைப் படுத்திப் பாடினார் மாணிக்கவாசகர். "அப்பன் நீ அம்மை நீ" என்று இறைவனை முன்னிலைப் படுத்திப் பாடினார் வாகீசர். ஞானசம்பந்தர் "தோடுடைய செவியன்" என்ற முதற் தேவாரத்தில் இறைவியை முன்னிலைப்படுத்தியும் "நிரைகழல் அரவம்" என்று திருக்கோணமலைத் திருப்பதிகத்தின் முதற் பாடலில் இறைவனை முன்னிலைப்படுத்தியும் பாடியருளியுள்ளார்.

கோணேஸ்வரத்தில் நடைபெற்ற மூன்றாவது குடமுழுக்கத்தைத் தொடர்ந்து நடைபெறும் மண்டலாபிஷேக பூர்த்தியின் ஞாபகார்த்த மலராக வெளிவரும் "சிவநெறிச்" சஞ்சிகையில் தெட்சண கயிலாயமாகிய கோணேஸ்வரத்தின் தெய்வீக வன்மையை விளக்கம் செய்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

வளர்க சிவநெறி! வாழ்க வையகம்!

## 1950 ஜூன் 27ல்

## நீலத்திரைக் கடல் ஓரத்திலே

## இறை திருக்கோலங்கள் தோன்றின கிணற்றினுள்ளே

| | அளவு | | | நிறை |
|---|---|---|---|---|
| சிவன் (சோமாஸ்கந்த மூர்த்தம் | 1' $8^1/_2$" | 10" | — | 70 இறாத்தல் |
| பார்வதி ( ,, ,, ) | 1' 4" | 8" | — | 30 ,, |
| சிவன் (சந்திரசேகர மூர்த்தம்) | 1' 8" | 7" | — | 25 ,, |
| பார்வதி (திரிபங்க வடிவம்) | 1' 8" | 5" | — | 30 ,, |
| கணேசர் | 1' 8" | $10^1/_2$" | — | 65 ,, |
| திரிசூலம் | 1' 7" | 1" | — | 8 ,, |
| விளக்கு முடி (அன்னப்பட்சி) | 1' 5" | 1' 2" | — | 7 ,, |

என்னும் திருவுருவச் சிலைகள் கண்டெடுக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து 1963-ம் ஆண்டிலும், 1981-ம் ஆண்டிலும், 1993 தைத் திங்களிலும் கும்பாபிஷேகங்கள் நடந்துள்ளன. போத்துக்கேயரால் இவ்வாலயம் இடித்துத் தரைமட்டம் ஆக்கியதன் பின் நடைபெற்ற புனரமைப்புகள் இவை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தினால் அழியாச் சிறப்புடைத்

# திருக்கோணேஸ்வரம்

திருமதி. பர்வதாமணி வன்னியகுலசிங்கம்

ஈழவள நாட்டின் கிழக்கு மாகாணத்தின் வட பகுதியில் அமைந்திருப்பது திருக்கோணமலை மாவட்டமாகும். இம்மாவட்டம் வடக்கில் மா ஓயா வையும், தெற்கில் வெருகல் ஆற்றையும், மேற்கில் அனுராதபுரம், பொலநறுவை மாவட்டங்களின் பிர தேசங்களையும், கிழக்கில் கொட்டியாரக் குடாவி னையும் எல்லைகளாகக் கொண்டதாகும். இம்மா வட்டத்தின் சிறப்புகளுக்கெல்லாம் கோபுரமாகத் திகழ்வது திருக்கோணேஸ்வரர் ஆலயமாகும். திருக் கோணேஸ்வர சிவாலயத்தின் சிறப்புக்கள் வார்த்தை களினால் வடிக்கப்பட முடியாதவையாகும். மாது மையாள் சமேதரான திருக்கோணேஸ்வரப் பெருமா னின் திருவருள் துணைகொண்டு இவ்வாலய மகிமை களை ஓரளவுக்கேனும் கூற விழைகின்றேன்.

திருக்கோணமலை நகருக்கு அணித்தாக சிறு குன்றுப் பகுதியில் சிறப்புற அமைந்துள்ள இவ்வா லயம் தூரத்தே நின்று நோக்குவோர் எவரையும் மெய் சிலிர்க்கச் செய்யும் தன்மை வாய்ந்ததொன் றாகக் காட்சியளிக்கின்றது. மனித உறவு நிலைக ளில் தாயன்பு அதி சிறந்ததாகக் கருதப்படுகின்றது. ஆயினும் அத்தகைய சிறப்பு வாய்ந்த ''தாயினும் நல்ல தலைவரென்றடியார் தம்மடி போற்றிசைப் பார்கள்'' என சமயகுரவராம் திருஞானசம்பந்தப் பெருமானால் பாடப்பெற்ற திருத்தலமாகிய திருக் கோணேஸ்வரம் ஈழத்திருநாட்டின் இரு கண்களுள் ஒன்றாகப் போற்றப்படும் வெற்றி வாய்ந்த சிவஸ் தலமாகும்.

திருக்கோணேஸ்வரம் வரலாற்றுச் சிறப்பு வாய்ந் ததாகும். இதிகாசங்களில் ஒன்றான இராமாயணத் தில் கூறப்படும் இராவணேசன் வழிபட்ட தலம் திருக் கோணேஸ்வரமென வரலாறு சான்று பகர்கிறது. அதுமட்டுமன்றி

> எடுத்தவர் தருக்கை இழித்தவர் விரலால்
> ஏத்திட சுத்தமாம்பேறு
> தொடுத்தவர் செல்வம்''

என ஆரம்பிக்கின்ற ஞானசம்பந்தப் பெரு மானின் தேவாரப் பதிகமும் இவ்வுண்மையை எடுத் துரைக்கின்றது. எனவே கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஆலயம் இதுவென்று வரலாறு காட்டும் உண்மையாகும். வரலாற்றுச் சிறப்புமிக்க இவ்வாலயத்தை கி. பி. 1624ம் ஆண்டள வில் போர்த்துக்கீசர் இடித்து அக்கற் கோவிலிலிருந்த கற்களால் பிரட்றிக் கோட்டையைக் கட்டினார்கள் என்பது வரலாற்றாதாரங்களோடு நிரூபிக்கப்பட்டுள் ளது. அக்காலப் பகுதியில் இலங்கையை ஆட்சிசெய்த போர்த்துக்கீச தளபதிகளின் பதிவேடுகளிலிருந்து தற் பொழுது கோட்டை அமைந்திருக்கும் நிலப்பரப்பு முழுவதும் திருக்கோணேசர் ஆலயத்துக்குரியதாக இருந்ததென்பதை நாம் அறிய முடிகிறது. அன்று போர்த்துக்கீசர் அழிக்க முற்பட்ட ஆலயம் இன்றும் மகாகும்பாபிஷேகம் செய்யப் பெற்றுப் புதுப்பொலி வுடன் அருளாட்சி செய்வது ஆள்பவர் காலதேச வர்த்தமானங்களுக்கு அப்பாற்பட்டவன் எனும் உண் மையை எமக்குப் புலப்படுத்தி நிற்கின்றது.

திருக்கோணேஸ்வரம் க்ஷேத்திரம் எனப் புகழ் பெற்றது. சைவ ஆலயங்கள் மூர்த்தி தலம், தீர்த்த விசேடங்கள் நிறைந்த இடம் க்ஷேத்திரம்எனப்படும். மாதுமையாள் சமேதராக அமர்ந்து அன்பர்க்குஅருள் பாலிக்கும் திருக்கோணேசப் பெருமானது ஆலயம் மூர்த்தி விசேடம் பெற்ற தலமாகும். இவ்வாலயத் தின் தலவிருட்சம் கல்லால் எனவும், தீர்த்தம் பாவ நாச தீர்த்தம் எனவும் கூறப்படுகின்றது.

> ''கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
> கோணமாமலை அமர்ந்தாரே''

என்று சம்பந்தப் பெருமானால் பாடப்பெற்ற இத்தலத்தின் பாவநாசச் சுனையானது நீண்ட படித் துறைகளையுடைய கேணியாகவும் அருகமைந்த தீர்த் தக் கிணற்றினையும் கொண்டமைந்திருந்ததெனவும் அறிய முடிகிறது. போர்த்துக்கீசர் பாவநாசச் சுனையை அழித்தமையால் சுனை தூர்ந்து தீர்த்தக் கிணறு மட்டும் தெய்வச்செயலால் எஞ்சியதென்பதும் வரலாறு காட்டும் உண்மைகளாகும். ஈழவள நாட் டின் சிவாலயங்களுள் க்ஷேத்திரம் எனும் சிறப்புப் பெற்ற திருக்கோணேஸ்வரம் இந்துக்கள் யாவராலும் போற்றப்படும் சிவாலயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணேஸ்வரம் திருஞானசம்பந்தப் பெருமானாலும், அருணகிரிநாதராலும் பாடப்பெற்ற சிவத்தலம் என்ற வகையிலும் சிறப்புப் பெற்ற தலமாகும். சைவத் திருமுறைகள் பன்னிரண்டும் தமிழ் மறை எனப் போற்றப்படுபவையாகும். இப்பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகள் திருஞான சம்பந்தப் பெருமானார் பாடியருளிய தேவாரத் திருப்பதிகங்களாகும். ஈழநாட்டில் திருக்கோணேஸ்வரமும், திருக்கேதீச்சரமும் சம்பந்தப் பெருமானால் பாடப்பெற்ற சிவத்தலங்களாகும். திருக்கோணமலைத் திருப்பதிகத்தின் பாடல்கள் யாவற்றினும் ஈற்றடியில் கோணமாமலையமர்ந்தாரே எனப் பாடப்பட்டுள்ளது. தெட்சண கைலாயம் எனப் போற்றப்படும் திருக்கோணேஸ்வரத்தில் ஆதியும் அந்தமுமில்லா அருட்பெரும் சோதியாம் கோணேச பெருமான் அமர்ந்திருந்து அன்பர்க்கு அருள்பாலிக்கின்றாரென்றும் அருங்கருத்து திருக்கோணமலைத் திருப்பதிகத்தை ஓதுவோர்க்கு ஏற்படுகின்றது.

''பரிந்து நன்மனத்தால் வழிபடுமாணி
தன்னுயிர் மேல் வருங் கூற்றைத்
திரிந்திடா வண்ணம் உலகத்தவர்க் கருளும்
செம்மையார்''

நம்மையாளுடையார் என மார்க்கண்டேயர் வரலாற்றையும் ஏனைய புராண வரலாறுகளையும் திருக்கோணமலைப் பதிகத்தில் பக்திச் சுவை சொட்டப் பாடியிருக்கும் பான்மையானது எம்மைப் போன்ற சாதாரண மானிடரால் எடுத்துரைக்கப் படுவதொன்றன்று.

திருக்கோணமலைத் திருப்பதிகம் போன்றே அருணகிரிநாத சுவாமிகளால் அருளப்பெற்ற திருக்கோணமலைத் திருப்புகழும் பல புராண வரலாறுகளையும் கோணேசரது திருத்தல மகிமையையும் போற்றிப் பாடுவதாக அமைந்துள்ளது.

''கதிக்கு நாயக உனைத் தேடியே புகழ்
உரைக்கு நாயெனை அருட் பார்வையாகவே
தாயருள் தரவேணும்''

அருணகிரிநாதர் கோணேசப் பெருமானைத் ''தாயருள் தரவேணும்'' என இறைஞ்சும் பான்மை எம்மால் எடுத்துரைக்கக்கூடியதொன்றல்ல. இன்றைய உலகம் விஞ்ஞானத்தின் முன்னணியில் மிதந்துகொண்டிருக்கின்றது. விஞ்ஞானத்தின் துரித வளர்ச்சியானது சில நன்மைகளை உலகுக்கு அளித்துள்ளது. ஆயின் அதேவேளையில் இவ்விஞ்ஞானம் உலகினை அழிவுப் பாதைக்கும் இட்டுச்செல்ல வழி சமைத்து வருவதை நாம் கண்கூடாகக் கண்டு வருகின்றோம். ஆனால் விஞ்ஞானிகளையே பிரமிக்கச்செய்யும் வகையில் நமது சமயமும் பண்பாடும் பல சாதனைகளை நிலைநாட்டி வருகின்றது. சிவதாண்டவம் விஞ்ஞானிகளால் விளக்கமுடியாத நுட்பங்களை விளக்குவதாயமைந்துள்ளதை சிவநெறிச் செல்வர்கள் எடுத்துக் கூறுகின்றனர். இறைவனைக் காட்டுங்கள் எனக் கேட்கும் நாத்திகனும் இன்றைய உலகில் இல்லாமலில்லை. அவ்வாறு கேட்போருக்கு

''காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி ஓதுவார்க்கு''

மட்டுமே இறைவன் காட்சி கொடுப்பார் எனக் கூறி இச்சிறு கட்டுரையை நிறைவு செய்கின்றேன்.


# சந்தா விபரம்

"சிவநெறி" முத்திங்கள் ஏடு

| | | |
|---|---|---|
| ஆண்டுச் சந்தா | — | 50/- ரூபா (அஞ்சல் செலவுடன்) |
| தனிப் பிரதி | — | 10/- ரூபா |
| ஆயுள் சந்தா | — | 1000/- ரூபா |

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

ஆசிரியர்,
சிவநெறி,
தி. மா. இ. இ. பேரவை
393, திருஞானசம்பந்தர் வீதி,
திருக்கோணமலை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Thirukkoneswaram - A Glimpse of Its History

**K. Chitravelu**
(Retd) Adm: Officer/Registrar, High Court

The Island of Sri Lanka was once upon a time described as a "Land of Demon" by a Historian in his book: perhaps he has said so in a metaphorical sense. The inhabitants of the Island were the 'Yakkas and Nagas", the aborigines of the country. The Yakka Queen, Kuweni was ruling her clan and it was during this period that the North Indian Prince Vijaya and his seven hundred followers who were banished from their Kingdom, landed in the North Western coast of the Island. They were supposed to have met Kuweni and her people, intermingled with them and started their living with them, in that part of the Island. With the evolution of time there evolved a Royal Dynasty and the inhabitants were continued to be ruled by them. The Royalty and their subjects were, in subsequent periods influened by the spread of Buddhism by the deciples of the Buddha who came from India from time to time and Buddhist shrines were built for worship.

The inhabitants of the Northern and Eastern parts of the Island largely consisted of followers of the Hindu religion. The existence of Hindu Temples from time immemorial in these areas, are landmarks that indicate the presence of Hindu population in these parts of the Island from very early times.

"Thirukonamalai", the land predominently inhabited by Tamil Hindus is known as "Trincomalee" in its English version. The place names, "Thirukkonamalai", "Thirukkonamamalai", "Thirukkonasalam" are one and the same and are synonymous with the name of the ancient Hindu Temple "Thirukkoneswaram" where the Temple is situated. From ancient times, the Thirukkoneswaram Temple and the Hindu population of Thirukkonamalai area were interdependent in the development of religious, social and cultural affairs. The antiquity and sanctity of the Thirukkoneswaram Temple complex needs no special emphasis, which in fact are evidenced by reports of past Historians as three main Temples, two at the extremities of the hill overhanging the sea and one in the middle at the highest point. The Temples' Holy fountain, the "Pavanasa Thirtham" which now exists as a deep well, is located at the Southern side of the hill. The Holy Tree of the Temple (Thala Virudcham) still exists luxuriantly rooted in the rock at the Northern extremity adjoining the present Temple. Thus, it becomes clear, that the entire area and extent of the hill is the property of the Thitukkoneswaram Temple. The fame and glory of the Temple was so great that a Portuguese Historian in report described the Temple as the "Rome of gentiles of the Orient......

An ancient Tamil Chronicle among many others, records the fact that as far back as the year 436 AD, a Chola King carried out large scale renovation work and improvements to the Thirukkoneswaram Temple complex. He is said to have organised and established permanent sources of supply of the daily requirements of the Temple such as Raw rice, milk, oil, honey flowers, earthen utencils firewood etc from the Thampalakamam, Kaddukulam and Koddiyar Pattus. The required man power for the performance of the various services and duties at the Temples daily and during special and annual festival occasions were obtained from selected families in the said Pattus (known as Tholumpu karar). These said Pattus are the areas which now comprise the entire Trincomalee District. The daily requirements are enormous in quantities and the customary mode of performance of poojas and other ceremonies are laid down in the Konesar Sasanam in detail. It, therefore, becomes evident that the Hindu population of the three Pattus and continuous and unterrupped connection with the Thirukkoneswaram Temple throughout the years. These features establish the fact that the Temple remained as a source of inspiration to the Hindu population of the area for the development of religious, social and cultural affairs and at the same time interdependent on such matters as stated earlier.

The Thirukkoneswaram Temple complex, during the zenith of its religious splendour and pristine glory, received its fatal blow of com-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

plete demolition by the Portuguese forces on the New Years day in the year 1622 AD. These ruthless invaders built a fort on the Southern part of the Temple precincts, making use of the debris of the demolished Temple consisting of carved stone pillars, stone block etc. These facts are borne out by the inscriptions relating to the Temple still appearing on the stone pillars that remain in the walls of the fort. The main entrance to this fort named as Fort Frederick on the the Southern side still remains as the only way of entry for the Hindu Public to Thirukkoneswaram. The Portuguese who committed this wanton act of destruction did not hold on in Tricomalee for long. The Dutch who succeeded them as rulers were not different in their behaviour towards the Tamils and their Hindu religion. They too, remained in Trincomalee only for a short period. Despite the destruction of the original edifice, the Holy premises continued to be venerated by succeeding generation of Hindus throughout the centuries.

Under the British rule, the Hindu Public were allowed worship without any restriction and the Devotees regularly congregated at the Northern extremity of the hill where one of the main Temples once existed and continued to worship and make offerings, which place was called as Swamy Rock. Even during the period of World War 2, when the rulers adopted strict security measures, the Devotees were allowed access to the Swamy Rock on set days with adequate safeguards.

The hopes of the Hindus, both in Trincomalee and in the rest of the Island of seeing the Temple of Thirukkoneswaram rise once again in its place, remained a dream till the year 1950. In the month of August that year, seven statues of the Deities and some other relics belonging to the Temple were unearthed at a place not too distant from Thirukkoneswaram when a well was being sunk. The miraculous escape of these statues from the vandelism and rapacity of the Portuguese marauders and their discovery gave the necessary impetus for the Hindu Public to commence re-building the Thirukkoneswaram Temple complex worthy of its original fame and glory. Efforts continued and by the year 1963, the Temple as it stands today at the Northern extremity of the hill was built and consecrated to the great delight and happiness of the Hindus throughout the Island. Although a greater amount of work still remains to be continued in respect of the other main Temples and buildings, this consecration created a religious re-awakening in the hearts and minds of the Hindu Public of Trincomalee.

Following the consecration, the religious functions at the Temple were started to be performed on a detailed scale with the customary six daily poojas, special ceremonies on auspicious occasions and the annual Thiruvila Festival. The Pavanasa Thirtham well was sanctified, covered and kept free from desecration. The open groud on the Northwestern side and in front of the Thirtham well were frequently cleared and preserved for the deities' processions and Audiences during the festival and the water cutting ceremonies. The Temple functions were carried out on these lines, providing fruitful thoughts to the Devotees, reminicent of the religious splendour that existed at Thirukkoneswaram in the past. This position lasted without any serious impediments or difficulties during the following 20 years from the time of consecration of the Temple.

In the year 1983, communal disturbances broke out in the country and Trincomalee was rated as one of the worst affected area. The Thirukkoneswaram Temple too had to pay its share in the upheavel. Daily functions at the Temple got disorganised not to mention about the special and annual festivals which too, were not conducted according to schedule. A larger number of armed forces moved into fort and the security measures were tightened. The situation became difficult for the devotees and pilgrims to visit the Temple. The Priests and the Temple servants vacated their quarters. In March 1986, some of the Deities installed in the outer sanctum of the Temple were dislodged from their positions and the gold and silver plates placed beneath were robbed by unknown persons. There was fear in the minds of the Hindu Public regarding the priceless statues of the Deities that once escaped the sacrilege at the hands of the Portuguese, would again face a perilous state.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

As time passed, the situation gradually improved. The then Government Agent, Trincomalee summoned a conference of the Hindu Organisations and the Management Committee of the Temple and suggested them to get together and reorganise the religious functions at the Temple and regularise them suitably for worship by Devotees. The Hindu Organisations and sections of the Hindu Public, however, were not able to do anything towards the improvement or reorganisation of the Temple affairs without the co-oporation of the Management committee whose members were not receptive to any meaningful suggestions. At the same time the committee did not prove equal to the tasks facing it on its own. No substantial improvements were effected as regards proper conduct of poojas and other functions. Conditions deteriorated to such a level that there were criticisms and complaints from the Hindu Public about the unorthodox manner the committee continued to conduct the only 'single' pooja a day with meagre offerings at the Temple.

In the latter part of the year 1992, the Governor of the North East Province and the Ministry of Hindu Cultural Affairs took the initiative to effect some improvements to the Temple buildings which were in a neglected state and to perform the Maha Kumpapishekam with a view to re-commence proper daily, special and annual functions at the Temple. The necessary funds were provided from the President's Fund, together from contributions obtained with the efforts of the Ministry of Hindu Cultural Affairs mostly from Hindu Organisations based in Colombo. A Restoration Committee appointed by these Authorities to attend to this work, completed their task in due time. The Maha kumpapishekam took place on the 11th of February to the happiness of all concerned and the Hindu Public of Trincomalee are grateful to the Honourable Minister, the Ministry Officials and the Governor of the North East Province for this accomplishment. The 45 Apishekams that follow the Kumpapishekam ceremony are taking place at present. The annual Thiruvila festival (Mahotchavam) is due to commence on the 5th of April with traditional Flag hoisting and would end with the Water cutting ceremony at the Pavanasa Thirtham well. It is obligatory on the part of the Management to see that this Festival which is to take place after a lapse of several years, is conducted properly, paying heed to all traditional requirements and fulfilling the desires of the Hindu Public in all respects.

At this juncture, the thoughts of the Hindu Public flash back to the dark days of the 17th century when the Portuguese invaders broke into Thirukkoneswaram Temple and ravaged its edifice. The invaders occupied a greater part of the percincts of the Temple. The succeeding rulers, the Dutch and the British too, continued to keep this land space under their control. Several buildings and ramparts had been built by them in places where the other two main Temples, shrines, pooja mandapams and Temples' go-downs, once, stood. There had been no opportunity for the Hindu Public to regain these areas from the foreign rulers. In fact the Hindu Public were in a "vacuum" as regards restoration of the Temples and proper worship arrangements till the discovery of the statues of the Deities of the Temple in the year 1950 as mentioned earlier.

We are now an Independent nation free from the shackles of foreign powers. Our present Government, through its Cultural Ministry has recognised the antiquity, fame and glory of the Thirukkoneswaram Temple in full measure. The generous contributions towards the restoration of the Temple and its religious functions and the valuable assistance given by the representatives of the Government on the occasion of the Maha Kumpapishekam are fully appreciated by the Hindu Public of Trincomalee. The Hindu Public are, therefore, confident and hopeful that the Government would in course of time extend its generosity further by making it possible for the Hindu Public to regain the land, space and amenities that the Thirukkoneswaram Temple once owned and subsequently lost to the foreign rulers. The Hindu Public have in their minds, plans for the re-building of the other two main Temples, creation of institutions like meditation centre, Training school for Hindu Priests and Scholars (Kurukulam) Library and reading rooms equipped with Hindu Chronicles and religious books and a Cultural museum. The last but no the least is the need for a Hindu Pilgrims' Rest for this famous and reputed Temple, which draws crowds of pilgrims and Devotees from various parts of the country and abroad and the stream of crowds swells during the Festival seasons.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண் பெருமை

செழுங்கடற்றரளம் செம்பொனும் இப்பியும் சுமந்து கொழித்துவன் திரைகள் கடலிடைச் சேர்க்கும் சீர்மை மிகு திருக்கோணேஸ்வரம் 1993ஆம் ஆண்டு மாசித் திங்கள் 10ஆம் திகதி புதன்கிழமை மகாகும்பாபிஷேகம் கண்டது.

1963, 1981, என இருதடவை அண்மையில் ஹம்ஸனாம்பிகை மாதுமையம்மாள் சமேதகோணேசப் பெருமானுக்குக் குடமுழுக்கு விழா எடுக்கப் பட்டது 25-01-81 இன் பின் சுமார் 12 வருடகால இடைவெளியில் இன்றைய கும்பாபிஷேகம் எமது மண்ணில் பூர்வீகச் சொத்தாம் கோணைநாதனாலயத்திற்குப் புதுப்பொலிவு தந்து நிற்கிறது.

திருக்கோணேஸ்வரம்.

கடலாடும் துறைமுகம் இம்மண்ணுக்குரியது
கனலேறும் எழுநீர்க் கிணறு இம்மண்ணுக்குரியது
சுவைசேர்க்கும் உப்பளமும் பசிபோக்கும் வயற் கனமும்
பசுமை போர்த்த முல்லை நிலமும் இம்மண் ணுக்கே உரியவை

சுருக்கமாகக் கூறின் குருஞ்சியும், முல்லையும், நெய்தலும் ஒன்றியைந்த மண்பெருமை கொண்டது கோணேசர் அமர்ந்துள்ள நெடுங்குன்றம்.

இக்குன்றத்தில் நின்று எதிரே நோக்கினால் ஏறத்தாழ நானூறு அடி ஆழத்தில் ஓயா உவர்க்கடல் கருநீலப் பட்டிலே வெண்முத்தம் தெளித்தாற்போல் திரை எழும்ப அசைந்தாடிக்கொண்டிருக்கும்.

அதன் எல்லையைத் தொட்டபடி எழுந்து நிற்கும் நீள்விசும்பு இந்தத் தூய சூழலிலே நடைபயின்று நம்மைத் தழுவிச் செல்லும் மென்காற்று மனோரம்யமான இந்தச் சூழல் இயற்கையின் பேராற்றலை இறைவனின் அற்புத சிருஷ்டி தத்துவத்தைக் காதிலே பேசாமற் பேசிச் செல்லும் அற்புதத்தை உணர்ந்தவர் உண்மை உணர்ந்தவரே.

கடலினுள் கோகர்ணம் போல் பசுவின் செவியென நீண்டு நிற்கும் பாறையின் எல்லையிலே கல்லால விருட்சத்தினடியில் அர்ச்சகர் கற்பூர ஜோதியை கடலைத் தாண்டி எதிரே தெரியும் பாறை நோக்கிக் காட்டுகிறார்.

முக்கோண வடிவிலே வாயில் போற் காணும் அந்தப் பாறையை நோக்கித் தேங்காய் வீசப்படுகிறது. பண்டு நால்வருக்குரிய பரமன் - தன் மூலத் தானமாக அப்பாறை அமைந்ததாக ஐதீகம், மனிதரால் தீண்டப்பட முடியாத இடத்தில் நிற்கும் அப்பகுதி மாலறியா நான்முகனும் காணாத மலையொத்த பரமேஸ்வரனின் இருப்பிடம் என்பது உண்மை போலும். இத்தலத்தில் நின்று கைமலர் கூப்பி மனமலர் குவிய விழிமலர் தாழ சிறிது போழ்து பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனின் புகழைப் பாடிப் பரவிட மெய் விதிர்விதிர்க்கும் விழிமுத்திரும் நெஞ்சம் நெகிழ்ந்து மெழுகொக்கும் ஊனும் என்பும் எல்லாம் உருகிடும்.

இந்த மண்ணுக்கு இந்தத் திருத்தலத்திற்குக் கல்லொத்த செஞ்சிணையும் கனிய வைக்கும் பேராற்றல் எப்படி வந்தது?

''மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாகத் தொடங்கினோர்க்கோர் வார்த்தை சொல சற்குருவும் வாய்க்கும் பராபரமே'' என்கிறார் தாயுமானவர்.

இந்த மூவகை விசேட அம்சங்களும் கொண்டு விளங்குவது திருக்கோணேஸ்வரம். வடகைலையினின்றும் வாயு பகவானால் பிரித்தெடுக்கப்பட்ட மூன்று சிகரங்களுள் ஒன்று இக்குன்றம் வடக்குத் தெற்காக வரையப்பட்ட நெடுங்கோடு (81 பாகை 15 கலை) மேலுள்ள இமயத்தின் சிகரமாய் வடகைலையை மருவி வந்து தெற்கில் நம் திருமண்ணையும் புல்வி நிற்கிறது. தெட்சண கைலாசம் என்ற பெயர் பெற்ற நம் திருவிடம் திருமூலரால் ''சிவபூமி'' எனச் சிறப்புற வழங்கப்பட்டது.

நாவலூர் பெருமை பெற்றது — நாவலூரனாம் சுந்தரரால்
சிகாழிப்பதி சீர்மை மிகப்பெற்றது — காழியர் கோன் சம்பந்தரால்
வாதலூர் வியக்கப் பெற்றது — வாதலூரடிகள் மணிவாசகப் பெருமானை.

தேவார முதலிகள் காலமன்றி இன்றும் ஆங்காங்கே தோன்றிச் சாதனை படைத்த கலைஞர் அறிஞர் குழாம் தாம் பிறந்த மண்ணுக்குப் பெருமை சேர்த்ததை காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றக்குடி அடிகளார்
வங்கக் குயில் தாகூர்
நல்லை வந்த நாவலர்
காரைக்குறிச்சி அருணாசலம்

சீர்காழி கோவிந்தராஜன் போன்றோர் சிலர் எமது மண் சிறப்பு நிலை பெற்றதோ தென்கைலை மாமலையில் நர்த்தனமாடும் நர்த்தக மணியின் பாதச் சிலம்பொலி ஓயாது அலம்பும் திருமேனி பாவை தன்னோடு இப்பகுதியில் வீற்றிருக்கும் பெற்றியாலேயே ஆகும்.

''குரைகடலோதம் நித்திலங் கொழிக்கும் கோண மாமலையமர்ந்தாரே''

நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன் உரை இது தெக்காரமா கோணத்தானே என்றும் நின்ற

''நெய்த்தானா என் நெஞ்சுளாயே'' திருநெய்த்தானப் பதிகத்தில் தொண்டருள் ஆணிமுத்தாம் நாவுக்கரசர் வாசகம் இது மறைக்காட்டானே திருமாந்துறையாய் மாகோணத்தானே — ஊர்த் தொகைப் பாடலில் அடியார்க்கும் அடியரான சுந்தரர் இசைத்தது.

ஆழிபுடை சூழ்ந்தொலிக்கும் ஈழந்தன்னில்
மன்னு திருக்கோணமலை மகிழ்ந்து செங்கண்
மழவிடையார் தமைப் போற்றி......... பெரிய புராணத்திலே தொண்டர் சீர் பரவிய சேக்கிழார் வாக்கிவை.

''நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர்
திருக்கோணமலை தலத்தாரு கோபுர
நிலைக்குள் வாயினில் கிளிப்பாடு பூதியில்
வருவோனே'' — திருப்புகழ் தந்த அருணகிரியின் 'புகழ்' மணக்கும் பா இது.

''கோணமாமலையில் வாழுங் கோதிலா அறிவே
நீ ஆணிலை பெண்ணுமில்லை அத்தனே
நமசிவாய''

நமசிவாய மாலையில் குருநமசிவாய தேசிகர் அருளியவை. திருக்கோணேச்சரச் சேத்திரமகிமை பலரால் ஏத்திப் பாடப்பட்டதற்காய சான்றுகள் சில இவையாகும்.

இச்சேத்திரத்தின் தொன்மை 2500 வருடங்கட்கு மேற்பட்டதெனலாம். இராவணனோடு தொடர்பு படுத்திக் கூறப்படும் வரலாறு பல இடங்களில் காட்டப்படுகிறது. சித்தர் பெரிய ஞானக் கோவை என்ற நூலை எழுதிய வித்துவான் எம். பி. வேணுகோபாலன் அவர்கள் பரதகண்டத்திலும், ஈழமண்ணிலும் தெய்வீக சாந்நித்தியம் நிறைந்த சேத்திரங்கள் முப்பத்தைந்தினை நிரல்படுத்தி அவற்றில் சைசூன்ய சக்தியை நிலை பெறுத்தியவர் பெயர்களையும் குறித்துள்ளார்.

இவ்வகையில் திருக்கோணேஸ்வரத்திற்குரியவர் கோரக்க நாதர் என்று குறிப்புள்ளது. இக்கருத்தினை இப்புனித சேத்திரத்தை ஞானாலயமாக்கித் தன் அகக்கண் திறக்கும் திறவுகோலாய்ப் பயன்கொண்டு பெருஞானப் பேறுற்ற ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தாஜி அவர்களும் கோணேஸ்வரப் பெருமான் புகழ் பாடும் தமது அருட் பாடலில் வருமாறு குறித்துள்ளார். ''கோரக்க முனிவர் செய்த தவப்பயனால் திருமலை வந்தமர்ந்த திருமலைத் தேவா''

ஆயிரங்கால் மண்டபமுடன் கூடி அமைந்திருந்த முன்னைய கோணேசர் ஆலயம் 1624 இல் போர்த்துக்கீசத் தளபதி கொன்ஸ்தாந்தின் டீசாவினால் இடிக்கப்பட்டது. உள்ளமும் உடலும் துடிக்க பக்தர்கள், தெய்வ மூர்த்தங்களைக் கொண்டோடி மறைத்தனர். சிதாகாச வெளியில் ஞானசம்பந்தர் தேவாரத்தில் கோணேசர் பக்தர் உள்ளத்தில் உறைந்தார். பிரிட்டிஷார் வசம் இலங்கை அகப்பட்ட 1795-ல் வழிபாட்டுச் சுதந்திரத்தை அவர்கள் நல்கினர். மக்கள் கோணேசர் குன்றில் வழிபடலாயினர். மனம் அமைதி பெறலாயிற்று. வழிபாட்டுரிமை வழங்கிய பிரித்தானியர் கோட்டை ஜப்பானியர் பொழிந்த குண்டுத்தாக்குதலால் ஒரு சிறிது சேதமும் ஏற்படாது தப்பியது. இது-இந்த ஆலய மகத்துவம்-இந்த மண் பெற்ற பெருமை என்று ஏன் சொல்லக்கூடாது?

மறைக்கப்பட்ட ஆலய விக்கிரகங்கள் 1950-ல் திருவருள் கைகூட வெளிக் கொண்டுவரப்பட்டன. இவ்வாலயத் திருப்பணிச் சபையினரின் முயற்சியால் அவை மக்கள் பார்வைக்காக வலஞ் செய்யப்பட்டு பிரதிட்டை செய்யப்பட்டன.

இன்று இம்மண்ணில் வாழும் நாங்கள் பெரும் தவப்பயன் செய்தவரே ஆலய தரிசனம் மீண்டும் கிடைத்திட இன்றைய கலைகலாசார அமைச்சர் திரு. பி. பி. தேவராஜ் அவர்கள் முயற்சி கைகூடியுள்ளது.

இதனை நிலைபேறாக்க வல்ல சக்தி நிச்சயம் இந்த மண்ணில் வாழும் நமது கையிற்றான் உண்டு. ஆலயதரிசனம் ஆயிரங்கோடி புண்ணியம் என்பார். மாலறநேயம் மலிந்தவர் வேடமும் ஆலயத்தானும் அரன் எனத் தொழுமே என்கிறது சிவஞானபோதம்.

இந்த ஆலயத்தினை உளச்சுத்தியோடு பூஜிப்பதனால் ஆலயம் சக்தி மிகப் பெருகும். அந்த ஆத்ம சக்தியே ஆலயத்தினை மேம்படுத்தும் சேவிக்கும் பக்தரையும் காத்து நிற்கும்.

''இயற்கையாகவே கோவிலுள்ள பூமி பவித்திர பூமி, புண்ணிய பூமி, அதனை தரிசிப்பதும், வலம் வருவதும் திருப்பாடல்களைப் பாடுவதும் நம் பாவப் பிணி தொலைத்து புண்ணியந் தழைக்க வழி வகுக்கும்'' என்ற காஞ்சி காமகோடிப் பெரியவர் கூற்றினை மனங் கொள்வோம். நமக்கும் நன்மை சேர்த்து நாம் வாழும் மண்ணுக்கும் அதில் வந்தமர்ந்து அருள் பாலிக்கும்கோணையம் பதியைப் பணிந்து நிற்போம்.

திருமதி. சி. பத்மநாதன்
சேவைக்கால ஆலோசகர்,
(தமிழ்மொழி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேஸ்வரத்தின் தொன்மை

தமிழ்மணி பாலேஸ்வரி நல்லரெட்ணசிங்கன்

திருக்கோணேஸ்வரம் பற்றிய பலவிதமான கர்ண பரம்பரைக் கதைகள் கூறப்பட்டபோதும் அது முறைக்கு முறை புனருத்தாரணஞ் செய்யப்பட்டுத் திரும்பவும் பொலிவுடன் விளங்கியதாகச் சரித்திரச் சான்றுகள் பல கூறுகின்றன.

கி. மு. 3544ல் ஒரு பெரிய கடல்கோள் ஏற்பட்டதாயும், அந்தக் கடல்கோளில் கோணேசர் ஆலயம் உட்பட இலங்கையின் பெரும்பகுதி கடலுக்குப் பலியாகியது என்றும் கூறுவர். இராமாயண காலத்துக்குப் பின்னரும் பெரும் கடல்கோள் கொண்டுவிட்டதாக 'ராஜவழி' என்ற பாளி நூலிலும் ஒரு குறிப்பைக் காணமுடிகிறது. இராம இராவண யுத்தத்தின் காலம் கி. மு. 6000 ஆண்டு என்பர்.

இவ்வகையான அனர்த்தங்களின் பின் திரும்பவும் கோணேசர் ஆலயத்தை குளக்கோட்டு மன்னன் கட்டுவித்துத் திருப்பணி செய்ததாக சரித்திரபூர்வமான சான்றுகளை நாம் காணமுடிகிறது. புராண இதிகாச காலத்திய வரலாறுகளுக்குச் சரித்திரச் சான்றுகள் தெளிவாக இல்லாதவரை அவற்றை நாம் செவிவழிக் கதைகளாகவே கொள்ள முடியுமேதவிர திட்டவட்டமாக உறுதிப்படுத்திச் சொல்லமுடியாது. ஆனால் சரித்திரக் குறிப்புக்கள் கல்வெட்டுக்கள் ஆகியவை மறுக்கமுடியாத அத்தாட்சிகளாகும்.

கோணேசர் ஆலயம் இயற்கையினால் அடைந்த பாதிப்புக்களுக்குப் பின் கி. பி. 1624ம் ஆண்டு கிட்டத்தட்ட 369 ஆண்டுகளுக்குமுன் போர்த்துக்கேயத் தளபதி கான்ஸ்டன்டைன் டி ஸாவினால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது.

இடித்த அதே கற்களைக்கொண்டு பிரட்டரிக் கோட்டை கட்டப்பட்டது. அக்கற்குகையில் மிஞ்சிய ஒரு கல்லில் அவ்வாலயத்தின் வருங்காலத்தைப் பற்றி ஒரு சாஸனம் எழுதிவைக்கப்பட்டதாகக் கூறுவர். அப்பொழுது கொன்ஸ்டன்டைன் டிஸா போர்த்துக்கல்லுக்கு அனுப்பிய ஒரு கடிதத்தில் பின்வருமாறு எழுதி அனுப்பப்பட்டதாகக் கூறுவர்;

லிஸ்பன் தேசிய புத்தகசாலையில் (ராயல் ஏஷியாட்டிக் சங்கப் பிரசுரம் 30வது மலர் 80ம் இதழ் 449ம் பக்கத்தில் இதைக் காணலாம் எனச் சொல்லப்படுகிறது) அதன்படி ஒரு குறிப்பும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இக்கோயில் இடித்துத் தள்ளப்படும்போது ஒரு கல்லில் சில விஷயங்கள் எழுதி வைக்கப்பட்டிருந்தன. கல்விமான்களைக்கொண்டு அவற்றை மொழிபெயர்த்து மாட்சிமை தங்கிய அப்போதைய போர்த்துக்கேய மன்னருக்கு அது அனுப்பிவைக்கப்பட்டது.

அந்தக் கல்வெட்டில்

வீதிய — மால் — மண்டா, கடவுளுக்கு இந்தக் கோயில் மாணிக்க ராஜாவினால் கட்டப்பட்டது. (சரித்திரக் கணக்கின்படி இக்கோயில் கி மு. 1300ம் ஆண்டில் கட்டப்பட்டிருக்கவேண்டும்) பிராங்ஸ் என்ற ஒரு சாதியினர் இக்கோயிலை அழிப்பார்கள். பிறகு இதைக்கட்ட இலங்கையில் எந்த மன்னரும் இருக்கமாட்டார்கள்.

இப்படிக் கான்ஸ்டன்டைன் டிஷா எழுதியதாகத் தெரிகிறது. மாணிக்கராஜா என்பது மனுராஜா என்பதற்குச் செய்த தவறான மொழிபெயர்ப்பாக இருக்க வேண்டும் எனப் பிரபல போர்த்துக்கேய சரித்திராசிரியர் வண. பிதா. குவிரோஸ் கருதுவதை திரு. சி. எஸ். நவரெத்தினம் தமிழரும் இலங்கையும் என்ற நூலில் சுட்டிக்காட்டியுள்ளார். வீதிய - மால் - மண்டா என்பது வீதியும் மேற்றணியும் மண்டபமும் என இருக்கலாம் எனக் கதிரமலைப்பள்ளு ஆசிரியர் கூறுகிறார். இன்றைக்கும் பிரடரிக் கோட்டைக்கு வெளியே புராதனமான இந்தக் கல்வெட்டு சிதைந்த நிலையிற் காணப்படுகிறது.

சிதைந்த மேற்படி கல்வெட்டைப் போர்த்துக்கேய மூலத்துடன் ஒப்பிட்டுப் பிரபல தமிழ்ப்பண்டிதர் ஒருவரின் உதவியுடன் முதலியார் சி. ராசநாயகம் யாழ்ப்பாணச் சரித்திரம் என்ற பிரபல நூலில் அதைக் கீழ்க்கண்டவாறு திருத்தி எழுதியுள்ளார்.

குளக்கோட்டு மகாராஜா இந்த ஆலயத்தைக் கட்டுவித்தபோது அதன் வருங்காலம் எப்படியிருக்கலாம் என்ற சோதிடத்தை இப்படிக் கல்லில் எழுதி வைத்திருந்தார். கோயிலை இடித்த போர்த்துக்கேயர்கள் இதைப்பார்த்து ஆச்சரியமடைந்ததுடன் அந்த சோதிடத்தின் சுருக்கத்தையும் தங்களுடைய மன்னருக்கு நகல் செய்து அனுப்பி வைத்தார்கள்

அதில் வெண்பாவாக எழுதி வைக்கப்பட்ட சோதிடம் பின்வருமாறு:-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னர் குளக்கோட்டு மகாராஜாவினால் கட்டப்பட்ட இந்தக் கோயிலை பிறகு ஒரு சமயம் பறங்கிகள் பிடித்துக்கொள்வார்கள். பிறகு பூனைக் கண்ணர்கள், சிவப்புக் கண்ணர்கள், புகைக் கண்ணர்கள் ஆகிய பல சாதியினர் ஆதிக்கத்திலிருந்து விட்டுக் கடைசியாக வடுகர்கள் (தெலுங்கர்) ஆதிக்கத்துக்குப் போய்விடும்.

இந்த சிலாசாசனத்துக்கும் 1624ம் ஆண்டில் கான்ஸ்டைன் டிஸா லிஸ்பனுக்கு எழுதியனுப்பிய சிலாஸாசன விவரத்துக்கும் சில வேற்றுமைகள் காணப்படுகின்றன. ஒன்று ஆலயத்தைக் கட்டுவித்தவர் மனுராஜா என்று ஒரு வரலாறும் குளக்கோட்டன் என்று இன்னொரு வரலாறும் கூறுகிறது. என்றாலும் ஆலயம் பறங்கியர் வசமாகி அழியுமென்ற விடயத்தில் மட்டும் இரண்டு வரலாறுகளிலும் ஒற்றுமை காணப்படுகிறது.

கோணேசர் ஆலயம் இராமாயண காலத்தில் இருந்ததாகக் கதைகளில் மட்டுமே கூறப்பட்ட போதும் குளக்கோட்டு மகாராஜன் அதைக் கட்டுவித்தான் அல்லது புனரமைத்துத் திருப்பணி செய்தான் என்பதுதான் பொதுவாக எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட வரலாறு.

இந்தக் குளக்கோட்டு மகாராஜன் எந்தக் காலத்தைச் சேர்ந்தவன் என்பது ஒரு கேள்விக் குறியாக இருந்து வருகிறது. கி. பி. 17ம் நூற்றாண்டில் போர்த்துக்கேய தளபதி கன்ஸ்டைன் டிஸா குளக்கோட்டு மகாராஜா கி.மு. 1300ம் ஆண்டைச்சேர்ந்தவன் என்ற நம்பிக்கை இலங்கையில் நிலவி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

சேரர் வரலாற்றுக் காலக்கிரம வரிசைப்படி கி. மு. 2700ம் ஆண்டைச் சேர்ந்தவன் மனுநீதி கண்ட சோழன். அவன் பரம்பரையில் வந்த பிரிய விருத்தன் வரராமதேவன், வீதிவிடங்கன் ஆகியோருக்குப்பின் கி. மு. 2600 முதல் கி. மு. 2560 வரை குளக்கோட்டன் அரசிருந்ததாகத் தெரிகிறது. இதன்பின் கி. மு. 2300ம் ஆண்டில் கடல்கோள் ஏற்பட்டதென்று ஆரியர் சதயுதப் பிரமாணத்தின்படியும் சரித்திர வரலாற்றின்படியும் அறியக்கூடியதாய் உள்ளது.

ஆதாரம்: 'குரைகடல் சூழ்ந்த கோணமாமலை அமர்ந்தாரே'

புராதன யாழ்ப்பாணச் சரித்திரம்: முதலியார் ராசநாயகம்

திருக்கோணமலை, திருக்கோணமலைத் திருவுருவங்கள் - முதலியார் குலசபாநாதன்.

ஏனைய பழைய குறிப்புக்கள்.

# வாசகர் கருத்து

திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவைக்கு முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிவநெறி தழைக்க தங்கள் வெளியீடான முத்திங்கள் சஞ்சிகை சிவநெறி (மலர் 02 ★ இதழ் 04) கிடைக்கப்பெற்றது. மிகவும் சந்தோஷம். இந்து சமயம் தாழ்ந்து கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் இந்து சமயப் பணிக்காக வெளியிடப்படும் தங்களின் சிவநெறி முத்திங்கள் சஞ்சிகை மாண்டு போகும் மனித குலத்தை மீண்டும் புத்துயிர் பெறச் செய்யும் என்று நினைக்கின்றேன். தங்களின் இப்பணி மேலும் இடைவிடாது தொடர எல்லாம் வல்ல பரம்பொருளை பிரார்த்திக்கின்றேன்.

இப்படிக்கு
செல்வி எஸ். சாந்தி
அன்புவழிபுரம்
திருக்கோணமலை

---

தங்களின் சிவநெறி இதழ் 04 கிடைக்கப்பெற்றேன். நல்ல பல அறிவான சமயக் கருத்துக்களையும், பொதுச் சிந்தனையையும் தூண்டத் தக்க ஆக்கங்களைச் சுமந்து வந்த சிவநெறியயின் மூலம் வாசித்துஅறியமுடியாத நல்ல பல சமயக் கருத்துக்களை அறிந்து கொண்டேன்.

சிறப்பாக இந்து சமய செய்திக் கண்ணோட்டம் என்னை வெகுவாகக் கவர்ந்துவிட்டன. தாங்கள் எடுத்துக்கொண்ட பணியினையும் அதில் தங்களின் அக்கறையினையும் சைவப் பெரியோர்கள் சைவத் தொண்டர்கள் ஏன் சைவ உலகமே என்றும் மறக்காது என்பதனை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

இத்தோடு இனிவரும் இதழ்களிலாவது ஒவ்வொரு விரத வரலாற்றினை வெளியிட்டால் சைவ மக்களுக்கு பெரும் பயன் கிடைக்கும் என்பது எனது பணிவான கருத்தாகும். இவ்விடயத்தினை ஆசிரியர் அவர்கள் கவனத்திற்கெடுப்பாரென நம்புகின்றேன். திருக்கோணமலை மாவட்டத்தில் பல சமய, சமூகப் பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் மதிப்பார்ந்த பொதுச் செயலாளர் திரு. செ. சிவபாதசுந்தரம் அவர்கள் என்றென்றும் எம் சைவ மக்களுக்கு நற்பணியாற்ற வேண்டுமென இறைவனை பிரார்த்தித்து விடை பெறுகின்றேன்.

சிவப்பிரியன் — கே. வடிவேல்
மத்திய வீதி, பட்டித்திடல்
தோப்பூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் செய்திச்சரம்

* தி. மா. இ. இ. பேரவையின் இரண்டாவது உப அலுவலகம் 25-1-1993 அன்று கந்தளாய் பிள்ளையார் கோவிலடியில் இந்து கலாசார முறைப்படி கந்தளாய் உதவி அரசாங்க அதிபர் திருமதி குசும்சாந்தி அவர்களால் மங்களகரமாகத் திறந்துவைக்கப்பட்டுள்ளது. கந்தளாயில் வாழும் தமிழ்பேசும் மக்களுக்கும், சிங்கள மக்களுக்கும் இவ் அலுவலகம் ஒரு வரப்பிரசாதமாக விளங்கும் என எதிர்பார்க்கின்றோம்.

* தி. மா. இ. இ. பேரவையினால் திருக்கோணமலை மின்சார நிலைய வீதியில் அப்பியாசக் கொப்பிகளைத் தயாரிக்கும் சிறிய அளவிலான ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்தொழிற் சாலையில் வன்செயலில் பாதிக்கப்பட்ட நான்கு இளைஞர்கள் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பேரவையின் புனர்வாழ்வுப் பொறுப்பாளர் திரு. பூ. புவனேஸ்வரன் இதனை மேற்பார்வை செய்கின்றார்.

* இந்து கலாசார இராஜாங்க அமைச்சினால் அண்மையில் நடாத்தப்பட்ட பொங்கல் விழாவின்போது பேரவையின் தொண்டர்களால் இன்றைய நிலைமைகளை சித்தரிக்கும் வண்ணம் மூதூரின் மண்வாசனையுடன் ''விடியலைத் தேடிய விதவைத் தாய்'' எனும் நாடகம் தயாரித்து அளிக்கப்பட்டது. இந்நாடகம் அனைவரின் பாராட்டினையும் பெற்றது குறிப்பிடத்தக்கது. பேரவையின் உதவித் திட்ட அலுவலர் திரு.க. பிரபாகரன் இந்நாடகத்தினை நெறியாள்கை செய்தார்.

* அண்மையில் நடைபெற்ற திருக்கோணேசர் ஆலய கும்பாபிஷேகத்தை முன்னிட்டு பேரவையினால் தொண்டர் முகாம் ஒன்று உருவாக்கப்பட்டு பக்தர்களுக்கு தாகசாந்தியும், அன்னதானமும் வழங்கப்பட்டது. இதனைப் பேரவையின் தொண்டரணியினர் முன்னின்று நடாத்தினார்கள். திருக்கோணமலையிலுள்ள இந்து இளைஞர்கள் அணி திரண்டுபணியாற்றினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு பேரவையின் இந்து கலாசார நிதியிலிருந்து 11250/- ரூபா செலவிடப்பட்டது.

* டச்சு உட்கோயில்கள் நிறுவனத்தின் நிதியுதவியுடன் திருக்கோணமலை மாவட்டத்தில் 1990ம் ஆண்டின் பின்னர் ஏற்பட்ட வன்செயலினால் விதவையாக்கப்பட்ட 100 விதவைகளுக்கு சுயதொழில் முயற்சியாக கோழி வளர்ப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதன் முதற் கட்டமாக அன்புவழிபுரம், செல்வநாயகபுரம் பகுதியில் உள்ள பத்து விதவைகளுக்கு தற்பொழுது திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது, குறிப்பிடத்தக்கதாகும். இத்திட்டத்திற்கு மொத்தமாக ஆறு இலட்சம் (6,00000) ரூபா செலவாகும்.

* பேரவையினால் அண்மையில் மூதறிஞர் திரு. எப். எக்ஸ். சி. நடராசா அவர்களுக்கு மட்டக்களப்பு வில்லியம் மண்டபத்தில் பேரவையின் மதிப்பார்ந்த பொதுச் செயலாளர் திரு. செ. சிவபாதசுந்தரம் அவர்கள் தலைமையில் பாராட்டு விழா ஒன்று நடத்தப்பட்டது. இதில் திருக்கோணமலை, மட்டக்களப்பு மறைமாவட்ட பேராயர் அருட்திரு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களும், கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளர் திரு. யோகராசா அவர்களும் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள். சிவயோகச்செல்வன் த.சாம்பசிவம் அவர்கள் பாராட்டுப் பத்திரத்தை வாசித்தார்கள். மற்றும் மட்டக்களப்பு இராமகிருஷ்ண சங்க சுவாமி ஜீவானந்தாஜீ மகராஜ் அவர்கள் பேரவையின் சார்பில் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்கள். இவ்விழாவை பேரவையின் கந்தளாய் இணைப்பாளர் திரு. வை. திவாகரன் ஏற்பாடு செய்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

* மூதூர் பகுதியில் கைதுசெய்யப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 140 குடும்பங்களுக்கு மூதூர் உப அலுவலகத்தில் வைத்து இரண்டாம்கட்ட நிவாரணம் வழங்கப்பட்டது. இதற்கு ஏற்பட்ட செலவு ரூபா 24, 411. 75 சதம்.

* பேரவையின் இந்து கலாசார நிதியிலிருந்து கிராமப்புற ஆலயங்கள் புனரமைக்கப்படுவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கையாக கிண்ணியாவில் உள்ள ஊற்றடிப்பிள்ளையார் ஆலயத்தில் மகா சிவராத்திரி தினத்தன்று பேரவையின் தொண்டர்கள் சென்று சிரமதானத்தின் மூலம் ஆலயத்தினைத் துப்பரவு செய்து மகா சிவராத்திரி பூசை நடத்தப்பட்டது. அவ் ஆலயத்திற்கு பேரவையினால் மங்களப்பொருட்கள் வழங்கப்பட்டது. அத்துடன் கரடிப்பூவல் கிராமத்தில் முருகன் ஆலயம் ஒன்றினை அமைப்பதற்காக நிலையம் எடுக்கப்பட்டு மங்களப் பொருட்களும் வழங்கப்பட்டது.

* சமூக அபிவிருத்தி உதவி - அவுஸ்திரேலியா நிறுவனத்தின் நிதியுதவியுடன் ஈச்சிலம்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கிராமங்களைச் சேர்ந்த மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதற்காக ஏற்பட்ட செலவு ரூபா 2,44,926. 75 சதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* கலைத்துறையை ஊக்குவிக்குமுகமாக ஈச்சிலம் பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள இசைக் குழுவிற்கு இசைக் கருவிகள் வழங்கப்பட்டன. இதற்கு ஏற்பட்ட செலவு 5,100/- ரூபா.

* பேரவையின் இரண்டாவது திருவாசக முற்றோதலும், இரண்டாவது திருவாசக விழாவும், தைத் திங்களில் பக்திபூர்வமான நிலையில் நடத்தப்பட்டது. புலவர் ஈழத்துச் சிவானந்தன் சிறப்பு உரையாற்றிய இத்திருவாசக விழாவிற்கு ஈழத்து சிவனடியார் கூட்டத் தலைவரும் திருக்கேதீஸ்வரம் திருவாசக மட ஸ்தாபகருமான தவத்திரு சரவணமுத்து அடிகளார் தலைமைதாங்கி திருவாசகப் போட்டிகளில் வெற்றி பெற்றோர்களுக்கு பரிசுகளையும் பேரவை சார்பில் வழங்கி வைததார்கள்.

* பேரவையின் மதிப்பார்ந்த பொதுச் செயலாளர் அவர்களும், இலங்கை இந்து இளைஞர் பேரவையின் தலைமைச் செயலாளர் அவர்களும் அண்மையில் மட்டக்களப்புக்கு விஜயம்செய்து சித்தாண்டி, ஏறாவூர், செங்கலடி, கல்லடி, சந்திவெளி, முறக்கொட்டாஞ் சேனை போன்ற கிராமங்களை சென்று பார்வையிட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் தி.மா. இ.இ. பேரவையினால் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மாணவர் இல்லத்திற்கு 2000/- ரூபாவும், மட்டக்களப்பு மங்கையர்க்கரசி மகளிர் இல்லத்திற்கு 1500/- ரூபாவும், சந்திவெளி மாணிக்கவாசகர் மாணவர் இல்லத்திற்கு 1500/- ரூபாவும் வழங்கப்பட்டது.

* தமிழகத்தில் இருந்து திருக்கோணமலைக்கு வருகைதந்த திருப்புகழ் மேதை மணிவண்ணன் அவர்கள் பேரவையின் ஏற்பாட்டின்படி அழைத்துச்செல்லப்பட்டு 1993-03-11 அன்று திருக்கோணமலை மேற்குத் தமிழ் மகா வித்தியாலயத்தில் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த கூட்டத்தில் ''ஆறுமுகமான பொருள்'' எனும் ஆன்மீகச் சொற்பொழிவை ஆற்றினார்.

* பேரவையின் இந்துமகளிர் அணியினரால் நினைவு கூரப்பட்ட சர்வதேச மகளிர் தின ஒன்றுகூடலில் கொழும்பு மகளிர் இந்து மன்றத் துணைத் தலைவி செல்வி சொற்சொரூபவதிநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்புரையாற்றியதோடு ஏற்கனவே வங்கியில் சிறுவர் சேமிப்புக் கணக்கு ஆரம்பித்த குழந்தைகளுக்கு பேரவையின் இவ்வருட அன்பளிப்பு நிதியையும் வழங்கி வைத்தார்கள்.




15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சிவநெறி சிறுவர் வட்டத்தில் சேரலாம்.

உறுப்பினர்களாகச் சேர ஆர்வமுள்ளோர் சிவநெறியில் வெளியாகும் இரு கூப்பன்களை நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

உறுப்பினர்களாகச் சேர்ந்த மாணவர்கள் எழுதும் தரமான ஆக்கங்கள் சிவநெறியில் அவ்வப்போது வெளியாகும்.

ஆக்கங்களை மாணவர் தாமாகவே எழுதினார் என்பதை சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர் உறுதிப்படுத்த வேண்டும்.

உறுப்பினர் உறுப்புரிமை அட்டை அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர்,
''சிவநெறி''
393, திருஞானசம்பந்தர் வீதி,
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமய செய்திக் கண்ணோட்டம்

★ திருக்கோணேஸ்வர ஆலயம் குடமுழுக்கு பெற்று மண்டலாபிஷேகம் நடைபெறுவது எல்லா சைவ மக்களும் சந்தோஷப்படக் கூடிய செய்தியாகும். இவ்வாலயத்தில் நடைபெற வேண்டிய நித்திய, நைமித்திய கிரியைகள் குறைவின்றி நடைபெறுவதற்கு திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபையினரும், இந்து கலாசார அமைச்சும் மக்களும் கோணேஸ்வரப் பெருமானின் அருளால் உதவி செய்யவேண்டும்.

★ சைவ ஆலயங்களில் நித்திய பூசைக்குத் தேவையான கற்பூரம், சாம்பிராணி போன்ற பூசைத் திரவியங்களை எல்லா ஆலயங்களிற்கும் இன்று கொண்டு செல்ல முடியாது உள்ளது. அவ்வாறு இருக்கும் சைவ ஆலயங்களுக்கு இப்பூசைத் திரவியங்களைக் கொண்டு செல்வதற்கான அனுமதியை இந்து கலாசார அமைச்சு சைவ ஆலயங்களில் நித்திய பூசை குறைவின்றி நடைபெற இவ் உதவியினைச் செய்து கொடுக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

★ நித்திய பூசை கூட நடைபெற முடியாமல் இருக்கும் சைவசமய ஆலயங்கள் அனைத்தும் விரைவில் புனரமைப்பு செய்யப்பட்டு குடமுழுக்குப் பெற்று நித்திய, நைமித்திய கிரியைகள் நடைபெற வேண்டும். அப்போதுதான் நாமும், நாடும் செழிப்படையும். இவை ஏற்படுவதற்கு திருநாவுக்கரசு நாயனார் திருமறைக் காட்டில் திருக்கதவம் திறக்கப் பாடிய திருப்பதிகத்தை ("பண்ணிநேர்மொழி") பக்தி சிரத்தையுடன் பாடி ஈழநாட்டில் இன்று பூசை நடைபெறாது இருக்கும் ஆலயங்களில் பூசை நடைபெறச் செய்ய வேண்டியது ஒவ்வொரு சைவ சமயியினதும் கடமையாகும்.

★ ஆலயங்களில் முறைப்படி பஞ்ச புராணங்களை ஓதுவதற்கு ஆலயங்கள் தோறும் ஓதுவார்களை நியமிக்க வேண்டும். இதனை ஒவ்வொரு ஆலயப் பரிபாலன சபையினரும் மேற்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

★ சமய குரவர் நால்வரது குருபூசைத் தினங்களை ஆலயங்களிலும், சைவசமய ஸ்தாபனங்களிலும் நடாத்த வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

★ சித்திரா பௌர்ணமி தினத்தன்று சித்திரபுத்திரனார் கதையை ஆலயம் தோறும் படித்து மானிடராகப் பிறந்த நாம் எவற்றை செய்ய வேண்டும் என்பதனை மக்களிற்கு உணர்த்துதல் வேண்டுமென விரும்புகின்றோம்.

★ திருக்கோணமலை மாவட்டத்தில் திருக்குறள் போட்டி மாதா மாதம் ஒவ்வொரு அதிகாரம் வீதம் நடைபெற்று அதில் வெற்றி பெறுவோர்க்கு பரிசில்கள் வழங்கப்படுகின்றன. இதில் இம்மாவட்டத்தில் உள்ள அனைத்து பாடசாலை மாணவர்களும் பங்குகொண்டு தமது திருக்குறள் அறிவினை வளர்த்துக் கொள்ளல் வேண்டும்.

★ நகரத்து வீதிகளில் தேரில் பவனி வந்து அருள் பாலிக்கும் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் கடந்த பத்து ஆண்டுகளாக மகோற்சவம் இன்றி இருந்தது. இவ்வருட மாசிமக தினத்தில் அம்பாளின் கருணையுடன் தரும வள்ளல் திரு. த. மாரிமுத்துச் செட்டியார் தலைமையிலான ஆலய பரிபாலன சபையினரும் தேர்த் திருப்பணி சபையினரும் மேற்கொண்ட பெரு முயற்சியினால் அம்பாள் தேரில் பவனிவந்து மக்களிற்கு அருள்பாலித்தாள். இக்கைங்கரியத்தில் அயராது உழைத்தவர்கள் அனைவர்க்கும் எமது பாராட்டு உரித்தாகுக.

## கோணேசர் பழமை கூறும் இலக்கியங்கள்

கோணேசர் பெருமையும் வரலாறும் கூறும் ஏடுகள் பல. பிரமாண்டத்தின் இடை நாடியென எடுத்தோதுகின்றது. சாந்தோக்கிய உபநிடதம். இதைச் சிவபூமியெனப் பாராட்டுகின்றார் திருமூலர் புண்ணிய பூமியெனப் போன்று நின்றது தக்ஷிணகைலாச புராணம், அனுக்கிரகத்தலமென அழைக்கின்றார் திருவாதவூரடிகள். பல்வளம் நிறைந்த பழம்பதியெனக் கந்தபுராணம் காட்டுகிறது. எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தி வாழ்ந்த இணையிலா நகரம் என இராமாயணம் இயம்பும், தாயினும் நல்ல தலைவர் உறையும் கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை என்கிறது திருஞானசம்பந்தர் தேவாரம்.

நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர் திருக் கோணாமலைத்தலத்தாருகோபுரம் என்று பாடியருளினார் அருணகிரிநாதர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமய வினாவிடைப் புதிர் - 6

## பரிசு பெற்றோர் விபரம்

1. முதலாம் பரிசு:
   செல்வி கோ. விஜித்தா,
   தி/விக்னேஸ்வரா ம. வி.

2. இரண்டாம் பரிசு: செல்வி செ. மலர்விழி
   தி/விக்னேஸ்வரா ம. வி.

3. மூன்றாம் பரிசு . செல்வி விஜயமோகன்
   செல்வி செல்வரெத்தினம்
   தி/விக்னேஸ்வரா ம. வி.

**ஆறுதல் பரிசில்கள்:**

1. செல்வி ரெட்ண நளினி தி/விக்னேஸ்வரா ம. வி.
2. செல்வி சிவச்செல்வி செல்வரெத்தினம்
   தி/விக்னேஸ்வரா ம. வி.
3. செல்வி வி. மைதிலி தி/விக்னேஸ்வரா ம. வி.
4. செல்வன் பொ. தவசிதன் தி/புனித சூசையப்பர் ம. வி.
5. செல்வன் சி. அருட்குமரன் 315/7, திருஞானசம்பந்தர் வீதி,
   திருக்கோணமலை.

**சரியான விடைகள்:**

1. மாணிக்கவாசக சுவாமிகளைக் குறிக்கும்
2. திருமந்திரம்
3. 1. சாந்தோக்கிய உபநிடதம்
   2. கேனோபநிடதம்
4. கோபதப்பிராம்மணம்
5. 1. பிரமபுராரணம்
   2. பதுமபுராணம்
6. வாமன அவதாரம்
7. திருக்குறுக்கை
8. திருவண்ணாமலை
9. ஐப்பசி மாத அச்சுவினி நட்சத்திரம்
10. ஒளவையார்

---

### தக்ஷணகைலாச புராணத்தில்
### திருக்கோணேசர் துதி

செய்மணித் தாளழகுந் தாள்மீதிற்
சிலம்பழ குஞ்சிறு மானேந்துங்
கையழகு மழுவழகுந் திருமார்பினூ
லழகுங் கருணைப் பார்வைத்
துய்யமுக மலரடிக்கும் புன்முறுவநகை
யழகுந் துலங்கித் தோன்று
மையனுயர் கைலைமலை முதல்வனை
யெம்மிதய மலரமுத்து கிற்பாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமய வினாவிடைப் புதிர் - 7

இந்து சமய தத்துவங்களையும், அதன் உண்மைகளையும் அறியும்பொருட்டு இதன்கீழ் தரப்பட்டுள்ள எல்லா வினாக்களுக்கும் இப்பத்திரத்தில் விடை எழுதி அனுப்பி வையுங்கள்.

1. திருக்கோணேஸ்வர ஆலயத்தின் தல விருட்சம் எது?
2. கன்னியாய் வெந்நீர் ஊற்று எச்சந்தர்ப்பத்தில் உண்டானது?
3. கச்சியப்ப சிவாச்சாரியாரின் குருபூசை தினம் எது?
4. சிவனின் உருவத்திரு மேனிகள் எத்தனை?
5. ஒரு மண்டலம் எத்தனை நாளைக் கொண்டது?
6. சிவலிங்கத்தில் அடங்கியுள்ள ஒன்பது திருமேனிகளும் எவை?
7. சிவன் முப்புரங்களை எரிக்கச் சென்றபோது தேர்ச் சில்லையாய் அமைந்தவர் யார்?
8. 1993 ஆம் ஆண்டு எந்த நட்சத்திரத்தில் திருக்கோணேஸ்வர ஆலய கும்பாபிஷேகம் நடைபெற்றது.
9. திருக்கேதீஸ்வர ஆலயம் எங்கு அமைந்துள்ளது.
10. நடராசப் பெருமானின் உடுக்கை ஏந்திய கை எதனைக் குறிக்கின்றது?

விடைகளை அனுப்பவேண்டிய முகவரி:
''ஆசிரியர்''
சிவநெறி
தி. மா. இ. இ. பேரவை
393, திருஞானசம்பந்தர் வீதி,
திருக்கோணமலை

பெயர்:

முகவரி:

முடிவுத் திகதி: 31-04-1993

இங்கே வெட்டவும்

திருஏகம்பமுடையார் திருவந்தாதியில்

## திருக்கோணேஸ்வரம்

ஆலையங்கார் கரு காவைகச் சூர் திருக்காரிகரை
வேலையங்கேறு திரு வான்மியூர் திருஊறல் மிக்க
சோலையங்கார் திருப்போந்தை முக்கோணம் தொடர் கடுக்கை
மாலையன்வாழ் திருவலங்கா டேகம்பம் வாழ்த்துமினே.

(பட்டினத்தடிகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டலாபிஷேக மலர்
# கவிதைப் பூங்கா


1. திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் பணிகள் — தாமரைத்தீவான்

2. கோணைநாதா — நிலாவெளியூர் கெஜதர்மா

3. முன்னை நிலை வேண்டும் என்னும் நிலை வேண்டும் — கெ. சித்திரவேலாயுதன்

4. சைவம் — பாலையூற்றாள்

5. பத்திரம் — இ. தமிழரசி

6. காண விழி தகுமோ ? — செல்வரெத்தினம் ஜெயச்செல்வி

7. குன்றில் அமர்ந்து குடியாளும் கோணேசர் — செல்வன் இ. நாகலிங்கம் ஈச்சிலம்பற்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணமலை மாவட்ட
# இந்து இளைஞர் பேரவையின் பணிகள்

திருமலை மாவட்டத்தில்
செயற்பட்டுக்கொண்டிருக்கும்
ஒரு சிவநெறி அமைப்பு
உயர் இந்துப் பேரவை தான்
அரும் பெரும் பணிகள் எல்லாம்
ஆற்றிக் கொண்டே வளர்ந்து
வரும் இதை எவரும் நெஞ்சால்
வாழ்த்தியே உயரப் பார்ப்பார்

மட்டுமா வட்டம் கூட
மறந்திடா வண்ணம் சென்று
தொட்டுமே அநாதை மக்கள்
துயர் துடைத்திடு முயற்சி
விட்டிடா வண்ணம் செய்து
வேண்டிடு பணிகள் மேலும்
திட்டத்தின்படியே ஆய்ந்து
செயற்படும் அவையிங்கிஃதே

கல்வியே சமுதாயத்தின்
கண் எனக் கண்டறிந்து
கல்விக்கு மதிப் பளித்து
கற்றிடுவோரைத் தூண்டி
நல்ல மேற் பட்டங் கண்டு
நாட்டினை வழி நடாத்த
வல்லவர்க் குதவி செய்து
வந்திடும் அவையிங்கிஃதே

மதத்தினை வசதிக்காக
மாற்றிடுவோரைக் கண்டு
இதமுடன் அணுகி யாவும்
இனிமையாய் எடுத்துக் கூறி
உதவிகள் புரிந்து மேலும்
ஓடிடா வண்ணம் காக்க
முதலிருந் தின்று மட்டும்
முயன்றிடும் அவையிங்கிஃதே

உருத்தெரியாத நோய்கள்
உற்றுமே மெலிந்து வாடி
மருத்துவ மனையில் சேர்ந்த
மக்களைச் சென்று கண்டு
வருத்தங்கள் மாறும் அன்பு
வார்த்தைகள் கூறிநோயின்
திருத்தத்திற் குதவி கூடச்
செய்திடும் அவையிங்கிஃதே

விடுத்திடு வரையும் தத்தம்
வீடறியாமல் போக்கைத்
தடுத்திடு முகாமில் உள்ள
சகல பேர்களையுங் கண்டு
தொடுத்திடுபனவற்றைக் கேட்டு
தொல்லைகள் நீங்குமாறு
கொடுத்திடுபவைகளுண்டேல்
கொடுத்திடும் அவையிங்கிஃதே

சமுதாயப் பணிகள் நாட்டில்
தடைபட்ட பணிகள் தூங்கும்
சமய நற்பணிகள் முற்றாய்த்
தாக்குண்டார் பணிகள் இன்பத்
தமிழ் மொழிப் பணிகள்மற்றும்
சகலமா பணியும் செய்ய
அமைந்த இந் திளைஞர்க்கான
அருமைப் பேரவையிங்கிஃதே

வெருகலோ டெல்லைக்காளி
விடுபட்டுப் போன போதும்
திருக்கோணநாயகர் தம்
திருக்குடமுழுக் கன்றாங்கே
அருந்தாக சாந்தி செய்தும்
ஆற்றியே பசிநோய் தீர்த்தும்
வருகின்ற - வந்த - இன்னும்
வரவுள்ள அவையிங்கிஃதே

ஊற்றடிக் கோயில் தொட்டு
ஊர்ச்சைவக் கோயிலெல்லாம்
ஏற்று நற் பணிகள் செய்ய
எதிர்காலம் காத்திருக்கும்
சோற்றை முன் வைக்கும் நாளில்
தொண்டை முன்வைக்கும் மன்றம்
நேற்றிருந் தைம்பதாக
நீண்டுள துண்மை யன்றோ?

செந்தமிழ்ப் பெரியார் பேணி
'சிவநெறி' தனையுங் காத்து
முந்தை நூலகமுங் கொண்டு
முழுநேரப் பணியில் நின்று
இந்திளம் பேரவை இங்
கெதிர்காலம் வளருகின்ற
சுந்தரப் பிறைபோல் வானில்
தோன்றிடக் காணலாமே.

**"தாமரைத்தீவான்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோணை நாதா!

கடல்சூழ வீற்றிருக்கும் கோணை நாதா
கருணை மழை பொழிந்திடுவாய் கோணை நாதா
உடல்நோய்கள் ஒழித்திடுவாய் கோணை நாதா
உளஅழுக்கு நீக்கிடுவாய் கோணை நாதா
விடமதனைஉண்டவனே கோணை நாதா
வினைகளெல்லாம் போக்கிடுவாய் கோணை நாதா
திடங் கொண்ட இராவணனின் கோணை நாதா
தேனிசையில் திளைத்தவனே கோணை நாதா

துன்பமென வந்தவர்க்குக் கோணை நாதா
துன்பந்தனை நீக்கிடுவாய் கோணை நாதா
இன்பமது நிலையில்லை கோணை நாதா
என்பதனை உணர்விப்பாய் கோணை நாதா
வன்நெஞ்சர் மாறிடவே கோணை நாதா
வழிகளினை செய்திடுவாய் கோணை நாதா
உன்செயலே உலகத்தை கோணை நாதா
உய்விக்க வேண்டுமய்யா கோணை நாதா

''நிலாவெளியூர் கெஜதர்மா''
இல. 24.
இராஜவரோதயம் வீதி,
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னை நிலை என்னும் நிலை வேண்டும்

கெ. சித்திரவேலாயுதன்

கோணமலை மீதிலுறை கோணை நாதா - உன்னைக்
கும்பிடக்குன் றேறி வந்தோம் அருள் நீதா

குடமுழுக்கு ஆடிநிற்கும் கோணைநாதா - எங்கள்
குறைகளெல்லாம் தீர்ப்பதற்கு வரம் நீதா

மண்டலாபிஷேகம் கண்ட மாதுமைபாகா - உன்னை
மன்றாடி நாங்கள் கேட்கும் வரம் நீதா

நிரந்தரமாய் ஆறுபூசை நடைபெற வேண்டும் - இங்கு
சுதந்திரமாய் வந்து போகும் சூழ்நிலை வேண்டும்

ஆண்டுதோறும் நகரவீதி நீ வரவேண்டும் - அந்த
மூன்று நாளில் முழுநகரும் விழிப்புற வேண்டும்

பாவநாசச் சுனையிலாட நீ வரவேண்டும் - அங்கே
பக்தர்களுக் கருள் பொழியத் தீர்த்த மழை வேண்டும்

தெப்பமேறிக் கடல் வழியாய் மலையைச் சுற்றி வருவாய் - உனைத்
தேடிவரும் அடியவர்க்குங் கடற்கரையில் அருள்வாய்

கொட்டியாரம் கட்டுக்குளப்பற்றில் வாழும் மக்கள் - குளக்
கோட்டனிட்ட கட்டளைபோல் தொண்டு செய்ய வைப்பாய்

நெல்லரிசி பால் தயிர்நெய் வெற்றிலை பாக்கு - அவர்
சொல்லியபோல் சொரிவதற்கு ஊர் செழிப்பாக்கு

வன்செயலால் நாங்கள் பட்ட சஞ்சலம் போதும் - இனி
உன் செயலால் உள்ளத்திலே நிம்மதி தாரும்

ஞானமழலை பாடி வைத்த புண்ணியபூமி - இங்கு
ஈனமின்றி சைவமக்கள் வாழ வழி காட்டும்

நாமமது சைவரென வாழும் நிலை மாறி - ஒரு
தூய சைவ சந்நிதியை இங்கு நிலை நாட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவம்

— பாலையூற்றாள்

அன்புச்சமயம் அறிவுச்சமயம்
இன்பச்சமயம் இயற்கைச்சமயம்
துன்பம் போக்கித் துயரம் நீக்கித்
தன்பால் ஈர்க்கும் தத்துவச் சமயம்
மூப்புச்சமயம் முறை பிறழாரின்
காப்புச்சமயம் கலைசேர் சமயம்
கூப்புச்சமயம் கொள்கைச்சமயம்
பூப்போட்டுள்ளம் புதுக்கும் சமயம்
பாடற்சமயம் பண்ணாள் சமயம்
கூடற்சமயம் கோணாச்சமயம்
வாடல் தவிர்க்கும் வாழ்க்கைச்சமயம்
ஏடெல்லாம் கண் டெழுதும் சமயம்
வீட்டுச்சமயம் வீரச்சமயம்
பூட்டுத் தளையும் போடாச்சமயம்
காட்டுச்சமயம் காணாதாரும்
கேட்டுப்பயிலும் கிளைகொள் சமயம்
ஒருமைச்சமயம் உண்மைச்சமயம்
உருவச்சமயம் உணரும் சமயம்
பெருமைச் சைவப் பெயராம் சமயம்
அருமைச் சமயம் அகிலத்துயர்கவே.

## பத்திரம்

இந்து மன்றப் பேரவை
ஈன்றெடுத்த ''சிவநெறி''
வந்து மாதம் ஒன்றிலே
வருகை மீண்டும் தந்திடும்

பத்தெடுத்து வாங்கியே
பயின்றுமே முடித்த பின்
பத்திரப் படுத்தினால்
பார்க்கலாமே பின்னரும்

முத்து முத்துக் கவிதைகள்
முழுமையான கட்டுரை
நித்தியத்துச் சிவநெறி
நீண்ட கேள்வி மறுமொழி

அத்தனையும் தாங்கியே
அமுதமாகி வந்திடும்
புத்தகத்தைப் போலவே
போற்றி யாமும் வாழ்வோமே.

இ. தமிழரசி
ஈச்சந்தீவு

---

● உயிர் அனைத்திடத்தும் வெறுப்பின்றி, நட்பும் கருணையும் உடையவனாய், மமகாரம் அகங்காரம் அற்று, இன்ப துன்பங்களைச் சமமாய்க் கருதி, பொறுமைபடைத்து எப்பொழுதும் சந்தோஷமாயிருப்பவன் யோகியாய், தன்னடக்கமுடையவனாய், என்னிடத்து மனம் புத்தியை சமர்ப்பித்தவனாய் யார் என் பக்தனாகிறானோ அவன் எனக்குப் பிரியமானவன்.

— பகவத்கீதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காண விழி தகுமோ?

குரைகடல் சூழ் குன்றம் தனில்
குடியிருக்கும் கோணை நாதர்
வரையில்லா அருள் சுரந்தே
வந்தவரை வாழ வைப்பார்
நிரைநிரையாய் பக்தர் கூட்டம்
நிமலனவன் தாள் பணிய
கரையில்லா கடல் கடந்தும்
கடிதாக வந்திடுவார்

மான் கூட்டம் கவி பாட
மகிழ்ந்தாடும் மயிற் கூட்டம்
தான் என்று தலை நிமிர்ந்து
தாவுகின்ற கவிக் கூட்டம்
ஓம் என்றே ஒலி செய்யும்
ஒய்யாரக் கடலலைகள்
தான் சூழ்ந்து வலம் செய்ய
தரணிக்கு அருள் சுரக்க

போதொத்த மென்மயிலாள்
புவிகாக்கும் தன்மையினள்
ஓர் ஒப்பும் கூறிடவே
இப்புவியில் யாருமிலாள்
தாயொத்த அன்புடனே
தலம் இதனை காத்திடவே
மாதுமையாள் தன் அருகில்
மகிழ்வுடனே அமர்ந்து விட்டார்

குளக்கோட்டன் கட்டி வைத்த
குன்றத்துக் கோயிலதை
வளம் எடுக்க என இங்கு
வந்தவனும் இடித்தழித்தான்
மனம் பதைத்த பக்தரெல்லாம்
மறைவாக நாதன் தன்னை
விரைவாக கொண்டு சென்று
வேறிடத்தில் மறைத்து வைத்தார்

ஆண்டுகள் பல மறைய
ஆங்கிலேயரும் செல்ல
தான் வரச் சித்தம் கொண்டே
தன்முகம் காட்டி நிற்க
ஊரவர் கூடி ஒன்றாய்
ஒப்பில்லாக் கோயிலதை
தான் மீள அமைத்தனால்
தரணியிலே பேறு பெற்றார்

ஒப்பில்லா சம்பந்தன்
உடன் சேர்ந்தே அருளாளர்
அக்கரையில் நின்றே தான்
அழகுறவே திருப்பதிகம்
அப்பனவன் கோணை நாதன்
அழகுறவே அமர்ந்திருக்கும்
தப்பில்லா திருக்கோலம்
தனைப் பாடி மகிழ்ந்தனரே

ஊர் மக்கள் தம்மை எல்லாம்
உறைந்திருந்தே காத்திடினும்
ஒப்பில்லா பேரன்பால்
உலாவந்தும் காத்து நிற்கும்
தாயினும் தயையுடையான்
தானவனின் திருக்கதவும்
காலக் கொடுமையினால்
தடை செய்யப்பட்டதம்மா

மூவாண்டுகள் தானாய்
மூடியிருந்த திருக்கதவு
தான் திறக்க வேண்டுமென்று
தாள் பணிந்த அடியார் தம்
ஆன குறை தீர்க்கவென
ஆண்டுகள் மூன்றின் பின்
கோணை நாதனவனும்
குடமுழுக்கு கொண்டு விட்டான்

சூழ்ந்திருந்த கலி தான் இனிமேல்
தூரவே விலகிவிடும்
துன்பங்கள் யாவும் இனி
பஞ்சினைப் போல் பறந்து விடும்
தாயினை மிஞ்சும் தயை
தரணியில் தந்திடும்
கோணை நாதனவன்
குடமுழுக்கு கொண்டு விட்டான்

அனைவர்க்கும் சமமாக
அருள் சுரக்க வேண்டுமென்றே
அழகிய மலை மேலே
அமர்ந்திருக்கும் கோணை நாதன்
மாதுமையாள் தன்னுடனே
மகிழ்ந்திருக்கும் திருக்கோலம்
காண விழி தகுமோ
கண்டவர்க்கு வேறின்ப முண்டோ?

**செல்வரத்தினம் ஜெயச்செல்வி**
திருக்கோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குன்றில் அமர்ந்து குடியாளும் கோணேசர்

— செல்வன் இ. நாகலிங்கம் —
ஈச்சிலம்பற்று, மூதூர்

கோணக் குன்றின் மேல்
குடி கொண்ட தேவனை
காணக் கண்ணிரண்டும் போதுமோ?
கடல்சூழ் தென் கயிலையின் கண்
தோணக் கண்டேன் யான் - எம்
தொல்லை அகற்றும் பிரான் புகழை
மாணப் பெரிதென மதித்தேன் - யான்
மாமலை அமர்ந்த தேவனை

மூர்த்தி தலம் தீர்த்தம் எனும்
முச்சிறப்பைப் பெற்ற தலம்
நேர்த்திகள் பல வைத்து
நிறைவு பல கண்ட தலம்
பெயர்த்தெடுக்க இராவணனால்
பெரு முயற்சி செய்த தலம்
போர்த்துக்கீசர் ஆட்சியினில்
புதைக்கப்பட்ட தலமுமிதே

தென் கைலாசமான எங்கள்
தெட்ஷின கைலாய மதில்
வன் சைவமான வலிமையுள்ள
எம் சைவம் வளர்வதற்கு
அன்னை மண்டோதரியும் அவள் மகன் இராவணனும்
அருச்சுனன் விஜயன் மனுநீதிச் சோழனுடன்
பின்னர் வந்த குளக் கோட்டன் ஸ்ரீராம தேவருமாய்
முன்னர் ஒரு நாளில் வழிபட்ட தலமுமிதே

பாவத்தைத் தொலைத்திடவே
பாவ நாசச் சுனையுண்டு - இறை
தாகத்தைத் தணித்திடவே
தெட்ஷின கைலாய முண்டு
கோபத்தை அடக்கிடவே
கோணேசர் பதிகமுண்டு
சோகத்தைத் தீர்த்திடவே
செல்லு கைலாய மின்று

அளப் பெரிய சேவை செய்தான்
அந்நாளில் நம்மரசன்
குளக்கோட்டு மகாராசன்
கூறுதற்கு அரியவனாம்
தொழற்கரிய ஆலயத்தின்
தொன்மையினை விளக்கிடவே
சளைக்காமல் பாடி வைத்தார்
சம்பந்தர் அன்றொரு நாள்

திருமலை எனும் நகரம்
தெய்வத் திரு நகராம்
திருஞான சம்பந்தரும்
திருவாக்கு அருணகிரியும்
பெருமையுறப் பாடி வைத்த
பேணரிய பாடல்களை
மெரு கூட்டிப் பாடியே - நாம்
மேன் மேலும் பயனடைவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவநெறியின் சிவப்பணி சிறப்புற
எமது நல் வாழ்த்துக்கள்

# HERBS MEDICALS

★ Medicines
★ Milk foods
★ Film rolls
★ Fancy goods

Sivan Kovilady
TRINCOMALEE



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவநெறியின் திருக்கோணேஸ்வர

மண்டலாபிஷேக சிறப்பு

மலரை வாழ்த்துகின்றோம்

# பிரகாஷ் ஜுவலர்ஸ்



தங்க விண்மீன்களாய் மின்னிடும்

அழகிய 22 கரட் தங்க வைர நகைகளைப் பெற்றிட

இன்றே நாடுங்கள்

## பிரகாஷ் ஜுவலர்ஸ்

321, நீதிமன்ற வீதி,

திருக்கோணமலை.

ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவநெறியை வாழ்த்துகின்றோம்

# அனோஜா றேட் சென்டர்

**164, பண்டாரநாயக்கா மாவத்தை,**

**கொழும்பு - 12.**

தொலைபேசி: *439590*

## கிளை: அனோஜா றேடர்ஸ்

**194, பிரதான வீதி,**

**திருக்கோணமலை.**

தொலைபேசி: *026 - 22580*

உங்களுக்குத் தேவையான சகலவிதமான
கட்டிடப் பொருட்கள் அனைத்தையும் மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஒரே இடம்

**"அனோஜா றேடர்ஸ்"**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நன்றி மறவோம்** **நாளும் நினைவோம்**

திருக் மகா
கோணேசப் பெருமானின்
கும்பாபிஷேகம் நடைபெறு
வதற்கு நிதி உதவி அளித்த
மாண்புமிகு ஜனாதிபதி திரு.
ரணசிங்க பிரேமதாசா அவர்க
ளுக்கும் முன்னின்று உழைத்த
இந்து கலாசார இராஜாங்க அமைச்
சர் மாண்புமிகு திரு. பி. பி. தேவ
ராஜ் அவர்களுக்கும் அமைச்சைச்
சார்ந்தோருக்கும் இக்கைங்கரியத்திற்கு
நிதி உதவி நல்கிய கொழும்பு நகரினைச்
சார்ந்த ஆலய தர்மகர்த்தாக்களுக்கும்
தனிப்பட்ட முறையில் உதவியளித்த அடி
யார்கள் அன்பர்கள் கிரியைகளை முன்னின்று
நடத்தி வைத்த பிரதம குரு பிரம்மஸ்ரீ சுவாமி
நாத பரமேஸ்வரக் குருக்கள் அவர்களுக்கும்,
கிரியைகளில் கலந்துகொண்ட ஏனைய சிவாச்சாரி
யார்கள் அனைவருக்கும் இக்கும்பாபிஷேகத்திலும்
ஆலயத் திருப்பணியிலும் முழுமனதுடன் ஆர்வமாகச்
செயல்பட்ட வடகிழக்கு மாகாண ஆளுநர் கௌரவ
நளின் செனவிரெட்ன அவர்களுக்கும் திருக்கோண
மலை மாவட்ட சைவமக்களின் சார்பில் மேலான
நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**திருக்கோணமலை மாவட்ட**
**இந்து இளைஞர் பேரவை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"

# இதன் வளர்ச்சிக்குத் தாராளமாக உதவுங்கள்

திருக்கோணமலை மாவட்டத்தின் பல பாகங்களிலும் சமயப் பணியும், சமூகப்பணியும், அகதிகளுக்கான பணிகளையும் ஆற்றுகின்ற முதன்மையான இளைஞர்களின் அமைப்பே திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*



**World Link Communications**

294, Galle Road, Wellawatte

Open 24 Hours

**FAX, TELEX, I. D. D. / LOCAL CALLS, PHOTO COPYING, COPY TYPING**

**Phone : 503576, 585061, 508328**
**Fax : 94-1-503575**
**Telex : 23261 Link CE**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

OSKHA ENTERPRISES 98 B, RATNAM ROAD, COLOMBO 13